விலை : 20.00

பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk

E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 21 திங்கட்கிழமை (07.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262



கலியாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144,

பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே


# சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் கையெழுத்துப் போராட்டம் உச்சம்

## மக்கள் தேடிச் சென்று ஒப்பமிடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச விசாரணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்துப் போராட்டத்தில் மக்கள் ஆர்வத்தோடு தேடித்தேடிச் சென்று கையொப்பமிட்டு வருவதை காண முடிகின்றது.

வன்னியில் நடந்த போர்க்குற்றம் மற்றும் மனிதவுரிமை மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி அகிம்சை வழிப் போராட்டத்தை முன்னெடுக்கும் வகையில்,

சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டு அமையம் அண்மையில் தோற்றுவிக்கப்பட்டது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தலைமை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு, பேராசிரியர் ப.சிவநாதன் தலைவராகவும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் செயலாளராகவும் உள்ள இந்த அமைப்பு கையெழுத்துப் போராட்டத்தை பல இடங்களிலும் முன்னெடுத்து வருகின்ற வேளையில்,

பொதுமக்கள் இப்போராட்டத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளதுடன், தேடிச் சென்று ஒப்பமிடுவதையும் காணமுடிகின்றது.

இதேவேளை இக்கையெழுத்துப் போராட்டம் இன்று கிளிநொச்சியில் இடம் பெறும். (ந)

# காணாமல் போனோர் பதிவுகள் ஐ.நாவிடம்

## சி.எச்.ஆர்.டி அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆணைக்குழுக்களின் விசாரணைகள், நீதிமன்ற விசாரணைகள் தொடர்பில் சி.எச்.ஆர்.டி எனப்படும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் அறிக்கை ஒன்றை தயாரித்து ஐ.நாவுக்கும் இந்தியா உள்ளிட்ட முக்கியமான நாடுகளின் தூதரக அதிகாரிகளுக்கும் கையளித்துள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க....

# ஜனாதிபதிக்கும் எனக்கும் தூக்கம் வருவதில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், தனக்கும் தற்போது நிம்மதியாக தூங்க முடிவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின், 69-வது ஆண்டு விழாவில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதன்னை கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவி

24 ஆம் பக்கம் பார்க்க....

# ஐ.நா. பொதுச்சபை அமர்வில் மைத்திரி தலைமையில் குழு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செப்டெம்பர் 15ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.நா பொதுச் சபை அமர்வில் பங்கேற்கவுள்ளார். இந்த நிலையில், ஜனாதிபதியுடன் பாரிய பிரதிநிதிகள் குழு ஒன்று இந்த அமரவில் பங்கேற்கவுள்ளதாக அறிய முடிகிறது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள இலங்கையின் ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிட அலுவலகத்தின் ஏற்பாடுகள் குறித்து பரிந்துரைக்கும் அறிவித்தல் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது. செப்டெம்பர் 20ஆம் திகதி முதல ஒக்டோபர் 4ஆம் திகதி வரை அலுவலகத்தின் தேவைக்கான வாடகை வாகனங்கள் தொடர்பில்,குறித்த அலுவலகத்தின்

23 ஆம் பக்கம் பார்க்க....

# ஜனாதிபதித் தேர்தல் இரகசியங்கள்; மனம் திறக்கிறார் மைத்திரி!

## ஐ.தே.கவின் மாநாட்டில் ஜனாதிபதி உரை



(கொழும்பு)

பாதுகாப்புக் காரணங்கள் இருந்தபோது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன் வீட்டுக்கு பாதுகாப்பாக ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு அழைத்துச் சென்றார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற அந்த கட்சியின் 69-வது ஆண்டு விழா மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

23 ஆம் பக்கம் பார்க்க....

# ஜெனிவா பயணிக்கும் த.தே.கூட்டமைப்பினர்

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கை எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று ஜெனிவா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகும் ஐநா மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளின் காலப் பகுதியில் இந்தக் குழு ஜெனிவாவில பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

23 ஆம் பக்கம் பார்க்க....

# சர்வதேச விசாரணை தேவையில்லை - பிள்ளையான்

(மட்டக்களப்பு)

சர்வதேச விசாரணையொன்று இலங்கைக்கு தேவையில்லையென்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் உள்ள


24 ஆம் பக்கம் பார்க்க....



நடுவுநிலை தவறாநன்னெறிகாக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையெழுத்துப் போராட்டம்




இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை மீறல்களை புரிந்தோருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் செயன்முறைப் பொறிமுறையொன்றினை ஏற்படுத்தக் கோரி யாழ்.மாவட்டத்தின் பல இடங்களில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இக் கையெழுத்துப போராட்டம் இடம்பெற்றது.

வடமராட்சியில் இருந்து பல பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் இக்கையெழுத்துப் போராட்டத்தில் பங்கு பற்றி தமது கையொப்பங்களை இட்டுச்சென்றார்.

(இ-5,19)

## சேவைகள்

அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, லண்டன், நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான "ONLINE" (ஒன்லைன்) விண்ணப்பங்களும் செங்கன் நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், சுவிடன், இத்தாலி (சகல செங்கன் நாடுகளுக்கும்) பிரயாண வதிவிட விண்ணப்பங்களும், சத்தியக் கடதாசி வேலைகளும், முறையாகவும், சரியாகவும் நிரப்பிக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டியவர்:
திருமதி K.ஞானேஸ்வரி ஜே.பி (அகில இலங்கை)
செக்கிறரேரியல் சேவிஸ்
3-வது மாடி, S-68,
கொழும்பு கோல்ட் சென்ரர்,
(பழைய மாலுக்கடை)
கொழும்பு 11.
தொலைபேசி: 011 3133851 / 011 3133945 / 077 3753791

(1698)

## மரண அறிவித்தல்

### பெரியதம்பி கலாரூபன்

புத்தூர் மேற்கு சிவன்கோவிலடியை பிறப்பிடமாகவும் நியூசிலாந்தை வசிப்பிடமாகவும், கொண்ட கலாரூபன் 04.09.2015 அன்று நியூசிலாந்தில் சிவபதம் அடைந்து விட்டார். அன்னார் புத்தூர் பெரியதம்பி பாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் சித்திரா (இந்தியா) வின் கணவரும், அபிநயா, சகானா, அனந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

காலம் சென்ற மாணிக்கவாசகர் (கிராமசேவையாளர்), சிவஞானதேவி, சிவனேசதேவி (அவுஸ்ரேலியா), விக்னேஸ்வரன் (கனடா), திருஞானசம்பந்தர், குகானந்ததேவி(இந்தியா) ஆகியோரின் சகோதரரும், சுகேந்திராதேவி, சாம்பமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) பால்ராஜன் (அவுஸ்ரேலியா), விஜயலக்சுமி(கனடா), அமிர்தகௌரி, அருணாசலம் துரை (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் நியூசிலாந்தில் 09.09.2015 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு வெலிங்டன் நகரில் இடம்பெறும், அவ்வேளை அவரது பிறந்த இடமான புத்தூர் சிவன்கோவிலடியில் உள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறும்.

புத்தூர் மேற்கு, புத்தூர்.
(சிவன்கோவிலடி)

தகவல்
குடும்பத்தினர்

(1691)

## மாபெரும் நூற்றாண்டு விழா நடைபவனி

### யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

1915 - 2015

காலம் :- 09.09.2015 புதன்கிழமை
நேரம் :- மு.ப 07.00 மணி
ஆரம்பிக்கும் இடம் :- யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 100 வது ஆண்டில் காலடி பதித்துள்ள இவ் வேளையில் எமது பாடசாலை கடந்து வந்த பாதைகளையும் பெற்ற சாதனைகளையும் எடுத்துச் செல்லும் வகையில் பாடசாலை சமூகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நடைபவனியில் பண்பாட்டு கலாசார விழுமியங்களை தாங்கிய வகையில் கலை நிகழ்வுகளுடன் கூடிய பேரணி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. எனவே இவ் நடைபவனியில் பாடசாலையின் ஓய்வுநிலை மற்றும் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

# எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டது தவறானது!

## சம்பந்தனை விமர்சிக்கிறார் தயான்

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வழங்கப்பட்டமை தவறானது என்று தயான் ஜயதிலக விமர்சித்துள்ளார். ரிவிர சிங்களப் பத்திரிகைக்கு அவர் கட் டுரை யொன்றை எழுதியுள்ளார்.

அக்கட்டுரையில் தயான் ஜயதிலக்க தொடர்ந்தும் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1977ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியை விட கூடுதல் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றிருந்த காரணத்தினாலேயே அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக முடிந்தது. எனினும் அதன் மூலம் நாட்டுக்கு தீங்குதான் விளைந்தது.

ஆனால் தற்போது சுதந்திரக் கட்சிக்கு 95 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். பொதுமக்களின் எதிர்பார்ப்பு அவர்கள் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டும் என்பதுதான். அதனைமீறி தேசிய அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டது வாக்களித்த மக்களுக்கு செய்த முதலாவது துரோகமாகும்.

அதன் பின்னர் கூட தேசிய அரசாங்கத்திற்கு எதிரான ஐம்பதுக்கும் அதிகமான சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அந்த வகையில் பார்த்தாலும் கூட எதிரக கட்சித் தலைவர் பதவி சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்க முடியாது என்ற வாதமும் இங்கு செல்லுபடியற்றது. ஏனெனில் கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஆட்சிமாற்றத்தின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சி அரசாங்கத்தின் பங்காளியாக மாறியுள்ளது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியான நிர்வாக அலகு அல்லது சமஷ்டியை வலியுறுத்தி வரும் ஒரு கட்சியாகும். அந்த வகையில் நாட்டின் அரசியல் அமைப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்குவது ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி விடும். அத்துடன் நாட்டின் இறையாண்மைக்கும் ஆபத்தை ஏற்படுத்தி விடும் என்றும் தயான் ஜயதிலக தொடர்ந்தும் விமர்சித்துள்ளார்.

(செ-12)

## வயலின் வித்துவான் இராதாகிருஷ்ணன் மறைவு

(யாழ்ப்பாணம்)

பிரபல வயலின் வித்துவான் இராதாகிருஷ்ணன் நேற்றுக் காலமானார்.

நல்லூர் மகோற்சவ காலத்தில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் நேற்றிரவு வயலின் வாசித்துக் கொண்டிருந்த இராதா கிருஷ்ணன் மேடையில் மயக்கமுற்றார்.

உடனடியாக அவர் அம்புலன்ஸ் வண்டியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் இடைநடுவில் அவரின் உயிர் பிரிந்தது. இணுவிலை பிறப்பிடமாகக் கொண்ட வயலின் வித்துவான் இராதா கிருஷ்ணன் ஆயிரக்கணக்கான இசைக் கச்சேரிகளில் வயலின் இசைத்ததுடன் வயலின் கச்சேரிகளையும் நடத்தியுள்ளார்.

இவரின் மறைவு ஈழத்து இசைத்துறைக்கு பேரிழப்பு என பலரும் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

(ந)

## காணி விற்பனைக்குண்டு

மீசாலை மேற்கு, மீசாலை பங்களா றோட்டில் உள்ள 40 தென்னை மரங்களுடன் வருமானம் உள்ள 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:0779171362
0775977210

## தேவை

உள்ளூர் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு சிறுப்பிட்டி, நீர்வேலிப் பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு
021 222 6700
077 654 9303

(1692)

## காணி, வீடு விற்பனைக்குண்டு

மீசாலை வடக்கு வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ள 4 பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. பாவித்த ஓடுகள், மரங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:0779171362
0775977210

(1697)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532

## வாழ்க வளமுடன் பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவின் 2015 ஆம் ஆண்டுக்கான யாழ் விருது பெற்ற


**பேராசிரியர் க.தேவராசா**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

திரு.நா.சிவநேசன்
அதிபர், யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி,
கோண்டாவில்.

(1690)

## மரண அறிவித்தல்



### அம்பலவாணர் பாலசுப்பிரமணியம்

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட **அம்பலவாணர் பாலசுப்பிரமணியம்** 06/09/2015 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் மலர்விழி (லண்டன்), தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆதித்தன்(லண்டன்), கிருஷ்ணராஜா ஆகியோரின் மாமனாரும் யுரேன், யுரேக்கா, யுனேத்தன், கரிசன், சயந்தன், சரன்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2015) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-2059)

...ற்றடி,
பொலிகண்டி.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படையினரின் போர்க்குற்றங்கள் மனித உரிமைகள் அமர்வுக்கு முன் வெளியாகும்

(கொழும்பு)

**இறுதிப்போர் நடைபெற்ற காலத்திலும், அதற்கு முன், பின்னான காலகட்டங்களிலும் இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பான காணொலியொன்று எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்விற்கு முன்னதாக வெளியிடப்படவுள்ளதாக தெரியவருகிறது.**

குறித்த காணொலியையும் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனமே தயாரித்துள்ளது.

எதிர்வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வின் போது இலங்கைக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று அதன் உறுப்பு நாடுகளை கோரும் செயற்பாடொன்றையும் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

தற்போது சனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளர் கெலம் மக்ரே உள்ளிட்ட குழுவினர் ஆர்ஜெண்டீனா, பொலிவியா, பாரகுவே, பிரேசில் மற்றும் மெக்சிக்கோ உள்ளிட்ட நாடுகளில் இது தொடர்பிலான சுற்றுப் பயணம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பு நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு வலியுறுத்துவதே அவர்களின் நோக்கமாகும்.

இவர்களது பயணம் உள்ளிட்ட ஏனைய செலவுகளை புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஏற்றுக் கொண்டுள்ளதாக இன்றைய திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## நாடாளுமன்றை உடன் கூட்டுமாறு பிரதமரிடம் ஜே.வி.பி. வலியுறுத்து

நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜே.வி.பி. கட்சி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமித்து, சுதந்திர ஆணைக்குழுக்களை உடனடியாக செயற்படுத்துவதை துரிதப்படுத்தும் நோக்கிலேயே ஜே.வி.பி. இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதும் தாமதிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச்சபை செயற்படத் தொடங்கியதன் பின்னரே சுயாதீன ஆணைக் குழுக்களை உருவாக்க முடியும்.

இதனைக் கருத்திற்கொண்டே நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜே.வி.பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திசாநாயக்க, தேவையற்ற தாமதமங்களைத் தவிர்த்து, அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாட்டை துரிதப்படுத்த நாடாளுமன்றம் உடனடியாக கூட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.(இ-7)

## மகிந்த ராஜபக்ஷவுக்கும் உத்தியோகபூர்வ இல்லம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டிய உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த இல்லம் வழங்கப்பட்டதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு 7 விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள வீடு ஒன்றே மகிந்தவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக இந்த வீட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பயன்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கொழும்பு பிஜட் வீதியில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியேறியதனைத் தொடர்ந்து, இந்த இல்லம் மகிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இல்லத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருத்தங்கள் செய்யப்பட்டதன் பின்னர் மகிந்த ராஜபக்ஸ அதில் குடியேறுவார் என தெரிவிக்கப்படுகிறது.முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கம் உத்தியோகபூர்வ இல்லம் உள்ளிட்ட வசதிகளை வழங்கவேண்டியது அவசியமானதாகும்.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள மகிந்த ராஜபக்ஷவுக்கு தொடர்ந்தும் முன்னாள் ஜனாதிபதிக்கான சலுகைகள் வழங்கப்படுவது சட்ட ரீதியானதா என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.(இ-7)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மார்ச் மாதம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடை பெறவுள்ளதாக அரசாங்க தரப்பி லிருந்து தெரிய வருகிறது. நாடு பூராகவுமுள்ள உள்ளூராட்சி மன்றங் கள் 335 இல் 301 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. இதேவேளை ஏனைய 34 உள்ளூராட்சி மன்றங் களின் பதவிக் காலம் அடுத்த மாதம் 15 ஆம் மற்றும் 31 ஆம திகதிகளுடன் நிறைவடையவுள்ளன.

பதவிக்காலம் முடிவடைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்கள் விசேட ஆணையாளர்களின் கீழ் கொண்டுவரப்பட்டு ள்ளன. அடுத்த மாதம் பதவிக் காலம் நிறைவ டையவுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக மும் தேர்தல் நடைபெறும் வரையில் விசேட ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்படவுள்ளன.

எனவே நடைபெறவுள்ள உள் ளூராட்சி மன்றத் தேர்தலை தொகு திவாரி முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அது தொடர்பிலான எல்லை நிர்ணய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து இவ்வருடமே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடை பெறும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்வரும் நவம்பர் மாதம் புதிய பாராளுமன்றத்தின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதால் இவ்வருடம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை. ஆகையினால் எதிர்வரும் மார்ச்மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிய வருகிறது. (இ-7)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி எங்களுக்கே தர வேண்டும்

### மகிந்த தரப்பு தொடர் போராட்டம்

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றிக் கொள்வதற்காக மகிந்த தரப்பு தொடர் போராட்டத்தை முன்னெடுத்திருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மகிந்த தரப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவரான இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா, இது தொடர்பாக வாரஇறுதி பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் அளித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சுமார் 56 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது தங்களுடன் இருப்பதாகவும், தமது அணி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் அறிவிப்பை விரைவில் வெளியிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் நாடாளுமன்ற எதிர்க்கட்சியில் கூடுதல் உறுப்பினர்களைக் கொண்ட அணி என்ற வகையில் தாம் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு உரிமை கோரப் போவதாகவும் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த புதன்கிழமை வரை தமது அணியில் இருந்த ஒரு சிலர் அமைச்சுப் பதவிகளுக்காக ஜனாதிபதி மைத்திரி தரப்புடன் இணைந்து விட்டதாக தெரிவித்துள்ள ரஞ்சித், எதிர்வரும் நாட்களிலும் அவ்வாறான அணிதாவல்கள் நடைபெறலாம் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே இராஜாங்க அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பதவிகளுக்கான நியமனங்கள் முடிவடைந்த பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றும் தமது போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## காணாமற்போனோர் குறித்த புதிய அறிக்கை வெளிநாட்டுத் தூதரகங்களிடம் கையளிப்பு!

காணாமற் போனோர் தொடர்பான புதிய அறிக்கை ஒன்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் சிரேஷ்ட அரசியல் தலைமையாளர், பிரித்தானியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் மற்றும் இந்தியாவின் உயர்ஸ்தானிகரக மூன்றாவது செயலாளர் ஆகியோரிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.இந்த அறிக்கை தொடர்பில் கருத்துரைத்துள்ள நிலையத்தின் தலைவர் கலாநிதி மகேசன் கணேசன், காணாமற் போனோர் தொடர்பில் உண்மையையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும் என்று கோரியே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த புதிய அறிக்கையில் மாத்தளை மனிதப் புதைகுழி, மன்னார் மனித புதைகுழி போன்றவை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



காணாமற் போனோரின் உறவினர்களான எக்னெலி கொடவின் மனைவி சந்தியா, கந்தசாமி பொன்னம்மாள், வதனா சுந்தரராஜ், அன்டன் ஜோசப் சிதம்பரம் ஆகியோரின் கருத்துக்கள் அடங்கிய குரல்களும் அறிக்கையில் அடக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் காணாமற் போனோர் தொடர்பில் சர்வதேச உத்தரவாதம் தேவை என்றும் இந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ரிசர்வ் வங்கி இலங்கைக்கு உதவி

இந்திய ரிசர்வ் வங்கியில் இருந்து 1.1 பில்லியன் டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள் ளன. வெளிநாட்டு ஒதுக்கங்களை இலகுப்படுத்துவதற்காக இந்த நிதி வழங்கப்படுகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையிலான நாணய பரிமாற்று உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள் ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே இந்த நிதி மாற்றம் செய்யப்படுகிறது.

இதன்படி 1.5 பில்லியன் பெறும தியான நாணய பரிமாற்று உடன் படிக்கை அமுலுக்கு வருவதாக இந் திய ஊடகம் ஒன்று தெரிவித் துள்ளது.

இந்த பரிமாற்றம் மூலம் அந் நியச் செலாவணி கையிருப்பு உயர்ந்திருக்கிறது. இத்தகைய பரி வர்த்தனை மூலம் பெறப்படும் தொகை நாட்டின் பொருளாதாரத் தை ஸ்திரப்படுத்தவும் பிற வர்த் தகப் பரிவர்த்தனைக்கு உதவும் என்று சிபிஎஸ்எல் வெளியிட்ட அறிக்கை தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பு கடந்த ஏப்ரல் மாதம் 40 கோடி டொலர் வழங்கப் பட்டது. இதுபோல நிதி பரிவர்த்த னைக்கான ஒப்பந்தம் இலங்கை மத்திய வங்கிக்கும் இந்திய ரிசர்வ் வங்கிக்கும் இடையே கையெழுத் தானது.




# இந்தியாவுக்கு விசேட முதலீட்டுப் பிரதிநிதி

இலங்கை முதலீட்டு சபையி னால், இந்தியாவுக்கான விசேட பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைகான புதிய முதலீடு களை கவருவதற்கான செயற் பாடுகளை முன்னெடுப்பதற்காக, அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் புதுடில்லி மற்றும் மும் பையில் இருந்து, இலங்கைக்கான முதலீடுகளை கவரும் செயற்பாடு களை மேற்கொள்வார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடு செய் யும முக்கிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக காணப்படுகிறது. இந்த நிலையிலேயே அங்கு விசேட பிர திநிதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி!

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை பாரியள வில் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த 6 1/2 வருடங்களுக் குள சர்வதேச சந்தையில் இவ்வாறு மசகு எண்ணெய்யின் விலை வீழ்ச்சி கண்டுள்ளதாக ரொயிட்டர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

ஒரு பீர்ப்பாய் மசகு எண் ணெ ய்யின் விலை கடந்த வாரஇறு தியில் 40 தொடக்கம் 45 அமெரி க்க டொலர்கள் வரை காணப்படு கின்றது.

2 மாதங்களுக்கு முன்னர் சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யின் விலை 60 தொடக்கம் 65 அமெரிக்க டொலர் களாக பதிவாயிருந்தது.

பிரேன்ட் சந்தையில் ஒரு பீர்ப் பாய் மசகு எண்ணெய்யின் இன் றைய விலை 43.51 அமெரிக்க டொலராக பதிவாகியது.

2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரேன்ட் சந்தையில் இவ் வாறு விலை பதிவாகியிருந்தது.

இதே வேளை அமெரிக்க சந்தையில் மசகு எண்ணை ஒரு பீர்ப்பாயின் வார இறுதி விலை 38.62 அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சி கண்டதுடன், 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வீழ்ச்சியா னது பாரிய வீழ்ச்சி என ரொயிட்டர செய்தி சேவை குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை இந்த மாதத்திற்குள் மாத்திரம் 13 வீதத்தால் வீழச்சியடைந்துள் ளதாக ரொயிட்டர் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் உலகில் எண் ணெய்க்கான கேள்வி வீழச்சிய டையலாம் என முதலீட்டாளர்கள் உத்தேசித்துள்ளமையே இந்த வீழ்ச்சியின் பிரதான காரணம் என அத்துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதே போன்று உலகின் இரண டாவது பொருளாதார நிலையான சீனாவின் பொருளாதார அபிவி ருத்தி வேகம் வீழ்ச்சியடைகின் றமையே இதற்கான பிரதான கார ணமென சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,350.52 | 7,215.11 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,049.15 | 3,957.83 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,018.319 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ)** கலமசு(1,819.70), யூனியன் கெமிக்கல்ஸ் (593.80), ரேடியன்ட் ஜெம்ஸ்(45.60) நுவரெலிய (1,584.90) ரீ சிமோல் ஹோல்டர்(37.50).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ)** ஜே.கே.எச்.(W)(17.20), பிசி பார்மா(0.80), ஈடன் ஹோட்டல் லங்கா(19.10), செரன்டிப் ஹோட்டல்ஸ்(34.00), அஸ்ஹொட் ஹோல்டிங்(W)(21.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# உணவிற்கான சிறந்த எண்ணெயை தேர்வு செய்வது எவ்வாறு?

எண்ணெயு சேர்ந்த உணவுகளை எல்லோரும் தவிர்த்து வரும் இந்த காலத்திலும் கூட எண்ணெய்ப் பயன்பாடு என்பது இன்றியமையாத ஒன்றாகவே காணப படுகின்றது. சந்தையில் பல எண்ணெய் வகைகள் காணப் பட்டாலும் ஆரோக்கியமான மற்றும் சுத்தமான எண்ணெ யைத் தெரிவு செய்வது சவாலாகவே இருக்கின்றது.

அந்த வகையில் தேங்காய் எண்ணெய் மனித உட லுக்கு மிகவும் உகந்தது என்று சர்வதேச அளவில் அறியப் படுகிறது, ஏனெனில் தேங்காய் எண்ணெயில் காணப் படும் நிறைவுற்ற கொழுப்பு (Saturated fat) மனித உட லுக்கு மிகவும் உகந்தது மற்றும் பாதிப்பற்றது என்று பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான நிறைவுற்ற கொழுப்பு தேங்காய் எண்ணெயில் 90% காணப் படுகிறது. மேலும் தேங்காய் எண்ணெயில் காணப்படும் (MCT- Medium Chain Triglycerides) நடுத்தர நீளக் கொழுப்பு அமிலங்கள் மிகவும் வேகமாக சமிபாட்டுத் தொகு தியில் இருந்து கல்லீரலுக்குச் சென்று சக்தியாக மாற்றப் படுகின்றமையால் மற்றைய எண்ணெயில் காணப்படும் கொழுப்பு அமிலங்கள்போல உடலில் தங்காது.

1. ஏன் போத்தலில் அடைக்கப்பட்ட எண்ணெயைக் கொள்வனவு செய்ய வேண்டும்? அண்மையில் பொருட் கள் பண்டங்களின் தரப்பரிசோதர்கள் நடத்திய பரிசோ தனைகளின் ஊடாக கேர்ணல் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் கலந்து விற்பனை செய்யப்பட்டமை கண்ட றியப்பட்டுள்ளது. இதை விட பாவனைக்கு உதவாத




பருத்திவிதை எண்ணெய் மற்றும் பல பாவனைக்கு உத வாத எண்ணெய்கள் கண்டறியப்பட்டன இதன் மூலம் உடம்பிற்கு ஏற்படும் தீங்குகளைப்பற்றி நீங்கள் சற்று சிந்தித்ததுண்டா?

2. ஏன் SLS சான்றிதழ் உடைய தேங்காய் எண் ணெயை கொள்வனவு செய்ய வேண்டும்? தேங்காய் எண்ணெயின் தரம் என்பது அதற்கு பயன்படுத்தும் மூலப பொருளான கொப்பராவிலே பெரிதும் தங்கியுள்ளது அந்த வகையில் கருமையான, பூஞ்சணம் பிடித்த கொப் பராவை பயன்படுத்தி பெறப்படும் எண்ணெய்களுக்கு SLS சான்றிதழ் வழங்கப்படமாட்டாது. அத்தோடு அவை RBD எனப்படும் இரசாயன முறை கொண்டு சுத்திகரிக் கப் படுகிறது. இவ்வாறான இரசாயன முறை கொண்டு தயாரிக்கப்படும் எண்ணெய் மனித உடலிற்கு நல்ல தென்று கூற முடியுமா?

R.B.D. தேங்காய் எண்ணெய் என்பது என்ன? (படம்-1) தரம் குறைந்த உலர்ந்த தேங்காய்களை பயன்படுத்தி பின்வரும் செயற்கையாக இரசாயன பொருட்கள் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டவை R.B.D எண்ணெய் எனப்படும். R-Refined- இர சாயன மற்றும் பௌதீக முறையில் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது B-Bleached- பிலீச் செய்யப்பட்டு இயற்கையான நிறம் அகற்றப்பட்டுள்ளது. D-Deodor- ized-தரம் குறைந்த உலர்ந்த தேங்காய்களால் ஏற்படும் துர்நாற்றம் நீக்கப்பட்டுள்ளது

(படம்-2) N-Joy வெள்ளைத்தேங்காய் எண்ணெய் ஆனது MS(Milling Superior) எனப்படும் சிறந்த கொப்பாராக்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவ தாலேயே N-Joy வெள்ளைத் தேங்காய் எண்ணெய் SLS சான்றிதழைப் பெற்றுள்ளது. இது இயற்கையான தங்க நிறத்தையும், குறைந்த வெப்ப நிலையில் (22° c) பால் நிறந்திற்கு ஒப்பான கட்டித் தன்மையை பெறும், ஒரே இடத்தில் அதிகநேரம் வைத்திருக்கும்போது போத்தலில்




அடியில் மண்டி படிதல் போன்றவை சிறந்த வெள்ளைத் தேங்காய் எண்ணெயின் குணநலன்கள் ஆகும்.

N-Joy 100% இயற்கையான தேங்காய்களால் தயா ரிக்கப்படுவதனால் சுத்தமான வெள்ளைத் தேங்காய் எண்ணெயின் நறுமணம், நிறம் மற்றும் ருசியை உங்க ளுக்குத் தரும் மற்றும் உயர் வெப்ப நிலையில் கூட அதன இரசாயனத் தொகுதிகள் மாற்றமடையாததால் வேறு எண் ணெய் வகைகள் போலல்லாமல் N-Joy வெள்ளைத் தேங காய் எண்ணெயினை பல முறைகள் பயன்படுத்தலாம்.

— விளம்பர விபரணம் —

# தொழில் இரகசியம்: இஸ்ரேலில் வர்த்தகம்..?

ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுகர்பெர்க், கூகிள் நிறுவனர்கள் லாரி பேஜ், செர்கி பிரின், டெல் கம்ப யூட்டர் தொடங்கிய மைக்கேல்டெல், மாக்ஸ் ஃபேக்டர், எஸ்ட்டீலேடர், கால்வின் க்ளெயின் போன்ற அழகுச சாதனங்கள் தயாரிப்பாளர்கள், நியூயார்க் டைம்ஸ், யு.எஸ். நியூஸ் அன்ட் வேர்ல்ட் ரிப்போர்ட் பத்திரி கைகளின் உரிமையாளர்கள்.

இவர்களுக்குள் ஏராளம் வேறு பாடுகள் இருக்கலாம். ஆனால், ஒரு பொதுவான ஒற்றுமை என்ன தெரியுமா? இவர்கள் எல்லோருமே யூதர்கள். உலகில் ஒரு கோடி நாற் பது இலட்சம் யூதர்கள் வசிக்கிறா ர்கள். முகாமைத்துவ ஆலோசகர் ஹரீஷ் ஷிவ்தசானி சொல்லுவார், "பிரபலம் இல்லாத. ஒரு யூதர்கூட உலகத்தில் கிடையாது. பல்வேறு சரித்திரக் காரணங்களால், சாதனை செய்வது இந்த இனத்தாரின் இரத் தத்தில் ஊறிய குணம்.?

இஸ்ரேலிலிருந்து நம் இறக்கு மதி பல நூறு கோடி. இதில் இரா ணுவ விமானங்கள், இயந்திரங் கள் மற்றும் அவர்களுடைய இரா ணுவத் தளவாடங்களின் முக்கிய வாடிக்கையாளர் இலங்கை.

**பூகோள அமைப்பு?**

மத்தியதரைக் கடற்கரையில் இருக்கும் மிகச் சிறிய நாடு. நிலப் பரப்பு 20,770 கிலோமீட்டர்கள். அதாவது இலங்கையைவிடச் சுமார் 3 மடங்கு சிறியது. லெப னான், சிரியா, ஜோர்டான், எகிப்து ஆகியவை அண்டைய நாடுகள். வறண்ட பாலைவனங்கள் ஒரு பக்கம், பனிமூடிய மலைகள் இன் னொரு பக்கம் என இரு மாறுபட்ட பருவநிலைகள்.

1950-ல் தங்கள் தலை நகரமாக இஸ்ரேல் அறிவித்த நகரம் ஜெரு சலேம். ஆனால், அரபிய நாடுகள் இதை எதிர்ப்பதால், தலைநகராக இயங்குவது டெல் அவிவ்.

**மக்கள் தொகை?**

80 லட்சம். 75 சதவீதம் யூதர் கள். மீதியில் பெரும்பாலானோர அராபிய முஸ்லிம்கள். கொஞ்சம் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். பேசும் மொழி ஹீப்ரூ.

**சுருக்க வரலாறு?**

பைபிள் நாட்களிலிருந்தே, பால ஸ்தீனத்தின் ஒரு பகுதியாக இருந்த இஸ்ரேல், யூதர்களின் தாயகம். ரோம சாம்ராஜ்ஜியத்தின் அங்க மாக இருந்தது. கி.பி. 66 இல் யூதர் கள் ரோமின் அடிமைத்தளையை உடைத்தார்கள்.

ஆனால், நான்கே ஆண்டுகளில ரோம் மறுபடியும் பாலஸ்தீனத்தைப் பிடித்தது. யூதர்கள்மீது அடக்குமுறை. மண்ணின் மைந்தர்கள் பல்வேறு நாடுகளுக்கு ஓடிப்போய் அங்கே புது வாழ்வு அமைத்துக் கொண்டார் கள். யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று வாழவேண்டிய கட்டாயம், சொந்த நாடே இல்லாத நிலை.

1897 இல், தியோடோர் ஹெர் ஜெல் என்னும் பத்திரிகையாளர் உலக யூதர்கள் இயக்கம் தொடங் கினார். பல நாடுகளில் சிதறிக் கிடக்கும் யூதர்களுக்குத் தனி நாடு அமைப்பது குறிக்கோள். 1948 இல், 2-ம் உலகப் போருக்குப்பின் இந் தக் கனவு நனவானது.

சுற்றியிருக்கும் அரபு நாடுக ளுக்கு இஸ்ரேலின் ஜனனத்தை ஜீரணிக்க முடியவில்லை. 1948, 1967 1973 என மூன்று முறை போர நடந்தது. எல்லாத் தடவையும் ஜெயித்தவர்கள் இஸ்ரேலியர்கள்.

**பொருளாதாரம்?**

தொழில்நுட்பத்தில் மகா கெட்டிக காரர்கள். சொட்டு நீர்ப்பாசனம் மூலம், பாலைவன நாட்டைச் சோலைக ளாக்கியிருக்கிறார்கள். இந்தத் தொழில் நுட்பத்தை இந்தியா உட் படப் பல நாடுகள் இஸ்ரேலிலிருந்து பெற்று வருகிறோம். இராணுவத் தளவாடங்கள், போர் விமானங்கள், நுணுக்கமான இயந் திரங்கள் தயா ரிப்பு ஆகியவை முக்கிய தொழில்கள். கம்ப்யூட்டர் உதவியுடன் பொருட்களை வடிவமைப்பதில், உலக அரங்கில் இஸ்ரேலுக்கு முக்கிய இடம் உண்டு. நாட்டின் முக்கிய செல்வம், அவர் கள் மூளை, கடும் உழைப்பு.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 134.08 | 138.85 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.66 | 212.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.27 | 155.32 |
| சுவிஸ் பிராங் | 136.80 | 143.61 |
| கனேடிய டொலர் | 100.83 | 105.81 |
| அவுஸ்திரேலிய டொலர் | 92.81 | 97.92 |
| சிங்கப்பூர் டொலர் | 94.21 | 98.58 |
| ஜப்பான் யென் | 1.11 | 1.16 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.03 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.68 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இறுதிப் போரில் உதவிய சீனாவுடனான உறவினை இலங்கை பேணவேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

**சீனாவுடனான உறவை இலங்கை தொடர்ந்தும் பேணவேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டுள்ளார். சீனாவின் உதவியில்லாமல் இறுதிப் போரின் போது இலங்கை இராணுவத்தினால் வெற்றிபெற்றிருக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

சீன செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சீனா இலங்கையின்பழைய மற்றும் வலுவான நட்பு நாடாகும். 2005 ஆம் ஆண்டு முதல் அது இலங்கையின் போரை முடிவுக்கு கொண்டு வர உதவிகளை அளித்தது.



எனவே அந்த உதவியை மறந்துவிடக்கூடாது என்று சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமையன்று சீனாவின் பீஜிங்கில் இடம்பெற்ற சீன- ஜப்பான் உலக பாஸிஸ எதிர்ப்பு போரின் 70வது நிறைவு நிகழ்வில் பங்கேற்ற சரத் பொன்சேகா, சீனா உலக சமாதானத்துக்காக பாரிய பங்காற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சிறிய நாடு என்ற அடிப்படையில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து நான் சர்வதேசத்திடம் முறையிடுவேன்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் செயற்பாட்டாளர்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராக சர்வதேசத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற ஒன்றியத்திடம் மற்றும் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்வதற்கு ஆயத்தம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இவ் அடக்கு முறை செயல்முறை தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இதன் ஊடாக ஜனநாயகம் மீறப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அருள்நெறி விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தி வருகின்ற யாழ். மாவட்ட அறநெறிப் பாட சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழா தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரைநல்லூர்ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி. காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்பிசெந்தில்நந்தனன் கலந்து கொண்டு சிற ப்பிக்கவுள்ளார். இதன் போது வரவேற்புரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யு.சந்திரராஜினி நிகழ்த்தவுள்ளார். கலை நிகழ்வுகளாக மாதகல் காந்திஜீ அறநெறிப் பாடசாலை மாணவி அ.நிதுசா- பேச்சு, நெல்லண்டை அம் மன் அறநெறிப் பாட சாலை மாணவி வி.ஜிசிந்தா-பேச்சு, தெல்லிப்பழை துர்க்கையம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் பண்ணிசை, சூராவத்தை முத்து மாரியம்மன் அற நெறிப் பாட சாலை மாணவர்கள் வழங்கும் பண்ணிசை, நவாலி முருகானந்தா அறநெறிப்பாடசாலைமாணவிபாஅேனியா- பேச்சு, கட்டுடை அரசடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவி ந.தர்சினி-பேச்சு, ஸ்ரீ கிருஸ்ணா அறநெறிப் பாடசாலை மாணவ ர்கள் வழங்கும் குழுநடனம் என்பன இடம் பெறும் (இ-5)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 29 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L சொந்த தொழில்
தொ.இ: B/4924

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 54 சூரி.செவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி, அரச தொழில்
எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்து பெற்றவர் விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்.
தொ.இ: B/4926

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 17 உயரம்: 165cm
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: B/4928

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 4 உயரம்: 167 cm
தகைமை/தொழில்:BSc லண்டன் PR
தொ.இ: B/4929

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 21 உயரம்: 5'2"
தகைமை/தொழில் B.COM/ அரச தொழில்
தொ.இ: G/4947

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 51 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L தனியார் தொழில்
தொ.இ: G/4952

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 59 செவ் 8 இல்
உயரம்: 162 cm
தகைமை/தொழில்: BSC, CIMA/ வங்கியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்.
தொ.இ: G/4954

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 76 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc/ பொறியியலாளர்
தொ.இ. G/ 4957

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

07.09.2015
(ஆவணி 21, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
நவமி காலை7.43 மணிவரை
திருவாதிரை முழுவதும்
இராகுகாலம் 7.34-9.14 மணிவரை
சுபநேரம் 12.04-1.34மணிவரை
நல்லைக்கந்தன் கைலாசவாகனம்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம்<br>மேல் நோக்கு நாள் | | செவ் சுக் |
| | | | குரு சூரி |
| | சனி | | புத ராகு |

**மேடம்:** சவால்களைச் சமாளிக்கும் நாள், சகோதரர்களின் சந்திப்பால் நல்ல சம்பவமொன்றைச் செய்து முடிப்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**இடபம்:** உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல் வந்து சேரலாம்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், வியாபார நலன் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சஞ்சலங்கள் கூடும், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, வெளிநாட்டுத் தொட ர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**கன்னி:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தந்தை வழி உறவில் மனம் நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் அமைதிகாண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, ரோக பயமுண்டு.

**தனுசு:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போட்டியாக செய ற்பட்ட வர்கள் மனம் மாறு வர், பண வரவுகள் திருப்திகர மாக அமையும், கௌரவமான நாள்.

**மகரம்:** உடல் நலம் சீராகும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரி யமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தாழ்ந்த சுபா வமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 8 மாதங்களில் மட்டும்

# யாழில் வர்த்தகர்களுக்கு எதிராக 338 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 19 இலட்சத்து 91,000 தண்டம்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் கடந்த 8 மாதங்களில் மட்டும் வர்த்தகர்களுக்கு எதிராக 338 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 19 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, உற்பத்திப் பொருட்கள் தொடர்பான விபரங்கள் உரிய முறையில் காட்சிப்படுத்தாமை, குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக பொருட்கள் விற்பனை செய்தமை,நிறைகுறைந்த பாண் விற்பனை செய்தமை, வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட பொதிசேவை உரிய முறையில் உரியவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்தவகையில் குறித்த வர்த்தகநிலைய உரிமையாளர்கள் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டதற்கமைய கடந்த ஜனவரி மாதம் 21வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 500 ரூபாயும், பெப்ரவரி மாதம் 22 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 92 ஆயிரத்து 500ரூபாயும், மார்ச்மாதம் 56வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 3 இலட்சத்து 35 ஆயிரத்து 500 ரூபாயும்,

ஏப்ரல்மாதம் 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 9 ஆயிரம் ரூபாயும், மே மாதம் 49 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 51 ஆயிரத்து 500 ரூபாயும், ஜூன் மாதம் 55 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 3 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாயும், ஜூலை மாதம் 65 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 4 இலட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபாயும் ஓகஸ்ட் மாதம் 54 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 3 இலட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபாயும் நீதிமன்றங்களால் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் மேற்குறிப்பிட்ட குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டால் எமக்கு அறியத்தரும் பட்சத்தில் எம்மால் உறுதி செய்யப்பட்டபின்னர் குறித்த வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் 021 321 9000 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக முறைப்பாடுகளை பதிவு செய்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# யாழில் 15-21ம் திகதிவரை சர்வதேச திரைப்பட விழா

## 45 கதைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன

குடாநாட்டில் சுயாதீன திரைப்படங்களை கொண்டாடுதல் எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக யாழ்ப்பாண சர்வதேச திரைப்படவிழா எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக விழாக்குழுத்தலைவர் பாக்கியநாதன் அகிலன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை மற்றும் சிலோன் தியேட்டர்ஸ் என்பவற்றோடு அஜன்டா 14 ஆகியன இணைந்து இந்த யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவினை ஏற்பாடு செய்துள்ளன.

யாழ். சர்வதேச திரைப்பட விழா தொடர்பாக விழா இயக்குநர் அனோமா ராஜகருண ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

குடாநாட்டில் சுயாதீனமாக திரைப்படங்களை கொண்டாடுவது என்பதே எமது அடிப்படையான நோக்கமாகும். யாழ்ப்பாண நகரத்தின் பெயரால் சர்வதேச திரைப்பட விழாவை நடத்துவதற்கு இது களமாக அமைகிறது. இவ்விழாவானது 30 வருட கால போரின்போது அழிவுகளிலிருந்து மீண்டெழுவதாக அமைவதோடு கலை மக்களைச் சென்றடையும் என நம்புகிறோம்.

இலங்கையில் யாழ்.மாவட்டத்தில்தான் அதிகமான குறும்படங்கள் இளையவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதிகமான இயக்கு நர்கள் இங்கு இருக்கிறார்கள்.

புகலிட சினிமா என்றதற்கு அப்பால் தரம் A என்ற வகுப்பைச் சேர்ந்த சர்வதேச ரீதியாக உயர் அங்கீகாரம் பெற்ற திரைப்பட விழாக்களில் இந்தக் குறும்படங்கள் வரவேண்டும்எனநாம் விரும்புகிறோம். இந்த விழாவில் 85 திரைப்படங் கள், 45 கதைப்படங்கள், 10 இற்கு மேற்பட்ட ஆவணப்படங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

இதில் ஏறக்குறைய 20 நாடுகள் பங்குபற்றுவதோடு விருதினை வென்ற மற்றும் விமர்சனபூர்வமாக பாராட்டப்பட்ட 22 ஐரோப்பிய திரைப் படங்களையும் காட்சிப்படுத்துவதற்காக யாழ்.சர்வதேச திரைப்பட விழாவுடன் இலங்கையில் ஐரோப்பிய திரைப்பட விழாவும் இணைந்து கொள்கிறது.

அத்துடன் இந்த விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது யாழ்ப்பாணத்திலுள்ள மிக மூத்த திரைப்பட விமர்சகர்களுள் ஒருவரான அ.யேசுராசாவிற்கு வழங்கப்படவுள்ளது.

அடுத்து மிகச்சிறந்த அறிமுக திரைப்பட விருதுக்கான விருது வழங்கப்படவுள்ளது.

அதில் இலங்கையில் இருந்து 2 திரைப்படங்களும் ஏனைய நாடுகளில் இருந்து 10 திரைப்படங்களும் போட்டியிடுகின்றன.

அடுத்ததாக மிகச்சிறந்த குறும்படத்துக்கான பார்வையாளர் விருது வழங்கப்படவுள்ளது.

இதில் 30 குறுந்திரைப்படங்கள் போட்டியிடுகின்றன. இதில் யாழ்ப்பாணத்திலுள்ள பார்வையாளர்கள் விழாவின்போது அவர்களுக்கு விருப்பமான குறும்படத்தினை தேர்ந்தெடுத்து வாக்களிக்க முடியும்.

இவற்றுடன் இணைந்து இந்தியாவில் இருந்து வருகை தரவுள்ள தொழில்சார் கலைஞர்களால் குறுந்திரைப்படம், திரைப்படத்துக்கான 3 பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளது.

யாழ்.பொதுநூலகம், பல்கலைக்கழக கேட்போர் கூடம், கார்கில்ஸ் திரையரங்கு மற்றும் திறந்த வெளியரங்கில் திரைப்படக் காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன.

இவைமுற்றுமுழுதாக இலவசமாக காட்சிப்படுத்தப்படவுள்ளன. இவற்றுக்கான திரைப்படப் பட்டியல் மிக விரைவில் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஒலிபெருக்கி ப்ாவனை தொடர்பாக கவனம் செலுத்துமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பக்தர்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் ஒலிபெருக்கி பாவனையை இதமான முறையில் பயன்படுத்துமாறு, யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா காலங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் சிலர் தமது விளம்பரங்களினை ஒலிபெருக்கி மூலம் அளவுக்கதிகமான சத்தத்துடன் மேற்கொள்கின்றனர்.

இது சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நேற்றைய தினம் இது தொடர்பான அறிவித்தலை வியாபார நடவடிக்கைகளுக்கு பாதிப்பில்லாத வகையில் யாழ்.மாநகர சபை வழங்கியிருந்தது.

எமது அறிவித்தலுக்கு அமைய வியாபார நிலையங்களில் ஒலி பெருக்கி சத்தங்கள் குறைக்கப் பட்டுள்ளன.

இந்த நடைமுறையை தொடர்ந்து அனைத்து வியாபார நிலையங்களும் கடைப்பிடிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# இளைஞன்மீது கத்திக்குத்து

## வல்லைவெளியில் சம்பவம்

(கரணவாய்)

கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி இமையாணன் கலைமகள் வீதியைச் சேர்ந்த தங்கவடிவேல் ரதீஸ்வரன் (வயது-30) என்ற இளைஞரே இவ்வாறு அனுமதிக் கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11.45 மணியளவில் வல்லைவெளிச் சந்தியில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று மேற்படி இளைஞன் வல்லைவெளிச் சந்தி வழியாக மோட்டார் சைக்கிளில் தனியாக வந்து கொண்டிருந்த வேளை நான்குபேர் கொண்ட குழு பிரஸ்தாப இளைஞரை இடைமறித்து கை கால்களில் கத்தியால் குத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது..

கத்திக்குத்துக்கு இலக்காகிய இளைஞன் தனது நண்பருக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்ததையடுத்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ-5,60)

## வீணாகான வாத்திய பிருந்தா



(நல்லூர்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டி வடக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் இந்திய கலாசார உறவுகளுக்கான பேராயம் (ICCR) ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். இந்தியத் துணைத் தூதர கம் நடத்தவுள்ள இந்தியாவில் இருந்து வருகை தரும் பிரபல வீணை இசைக்கலைஞர் ஸ்ரீமதி ரேவதி கிருஷ்ணாவின் வீணாகான வாத்தியப் பிருந்தா மற்றும் பயிற்சிப்பட்டறைகள் எதிர் வரும் 10,11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதற்கமைய 10 ஆம் திகதி வியாழக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பிற்பகல் 5 மணிக்கு நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

11ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெறும். பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஆ.பு.பளிஹக்கார கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார், (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மருத்துவமனைக்கு ஜனாதிபதி மைத்திரி விஜயம்

(கொழும்பு)


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பிலுள்ள லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன, லேடி ரிஜ்வே மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் மற்றும் நவீன உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதில் ஆர்வம் காட்டியிருந்தார்.

இந்நிலையில் மருத்துவமனையின் தற்போதைய நிலை மற்றும் தேவைகள் குறித்து அறிந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் அங்கு நேரடியாக விஜயமொன்றை மேற் கொண்டிருந்தார்.

இதன்போது மருத்துவமனையின் இருதயநோயாளர் பிரிவு மற்றும் அப்பிரிவின் அறுவைச் சிகிச்சைக் கூடம் என்பவற்றை ஜனாதிபதி பார்வையிட்டார்.

இந்த விஜயத்தின் போது மருத்துவமனைக்கு வருகை தந்திருந்த வெளிநோயாளிகளின் பெற்றோர்களையும் சந்தித்து உரையாடிய ஜனாதிபதி மைத்திரிபால, அவர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார். (இ-7)



# ஐந்து முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அறுவருக்கெதிராக வழக்கு தொடர முடிவு

(கொழும்பு)

**கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஐந்து அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது. எதிர்வரும் இரண்டு வார காலப் பகுதியில் இவ்வாறு வழக்குத் தொடரப் படவுள்ளது.**

ஆறு பேருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது. அரச சொத்து துஷ்பிரயோகம், நிதி மோசடிகள், தரகு பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுண வர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் எஸ்.எம். சந்திர சேன ஆகியோருக்கு எதிராக வழக் குத் தொடர படவுள்ளது.மேலும் மேல் மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு எதிராகவும் வழக்குத் தொடரப்பட உள்ளது.

அரசாங்கத்தின் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு, இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் வழக்குத் தொடரப்பட உள்ளது.

எதிர்வரும் வாரங்களில் இவ்வாறு வழக்குத் தொடரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(இ-7)

## அரசியலமைப்பில் மீள் திருத்தங்களை தேசிய அரசாங்கம் மேற்கொள்ளும்

(கொழும்பு)

புதிய தேசிய அரசாங்கம், சில அரசியல் அமைப்பில் மீள் திருத்தங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் தகவல்படி, தேர்தல் மீளமைப்பு, ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்தல், பத்திரிகை சுதந்திரம், உள்ளிட்ட மீளமைப்புக்களே நாடாளு மன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன.

இதனை தவிர, தகவல்களை தெரிந்துகொள்ளும் சுதந்திரம் தொடர்பான யோசனை, சுதந்திரமான கணக்காய்வு யோசனை மற்றும் சிறுவர்களின் நீதிபாதுகாப்பு யோசனை என்பனவும் முன்வைக்கப்படவுள்ளன.

இதேவேளை தேசிய அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் பொது வேலைத்திட்டங்களில் பொது உடன்பாட்டை காணும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவதாக விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## தேர்தல்கள் ஆணையாளருக்கு பவ்ரல் அமைப்பினால் கடிதம்

கடந்த தேர்தலின்போது அரசாங்க வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.



பொதுத் தேர்தலின்போது தகுதிகள் வழங்கப்படாத அநேகர் அரசாங்க வாகனங்களை பயன்படுத்தியுள்ளதாக பவ்ரல் அமைப்பிற்கு பல முறைப்பாடுகள் கிடைத் துள்ளமையினால், இக்கோரிக்கையை தேர்தல்கள்ஆணையாளரிடம்முன்வைததாக குறித்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் பொதுத் தேர்தலுக்கு முன்னர் சுற்றறிக்கை ஒன்றினை வெளியிட்டு அனைத்து உறுப்பினர்களும் அரசாங்க வாகனங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தினால் ஒரு வாகனத்திற்கு தலா 1 இலட்சம் ரூபாய் என செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

எப்படியிருப்பினும், குறித்த கால கட்டத்தில் அரசாங்க வாகனத்தை தேர்தல் நடவடிக்கைகளுக்கு சட்ட விரோதமாக பயன்படுத்தியமை தொடர்பில் வெகு விரைவில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## லீசிங்கால் கடனாளியானவர்களைக் காப்பாற்ற களத்தில் மேர்வின்சில்வா

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, கடனாளிகளைக் காப்பாற்றும் முன்னணி ஒன்றை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

வாகனங்களை லீசிங் அடிப்படையில் பெற்றுக்கொண்டு நெருக்கடியில் சிக்கியவர்களை பாதுகாக்கும் நோக்கில் குரல் கொடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் புதிய முன் னணி ஒன்று உருவாக்கப்படும்.

நாடு முழுவதிலும் பாரியளவில் லீசிங் மாபீயா ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் பேசுவதற்கும் குரல் கொடுப்பதற்கும் எவரும் முன்வரவில்லை.

வாகன லீசிங் பெற்றுக்கொண்டு சிக்கித் தவிக்கும் அப்பாவி மக்களை காப்பாற்றுவது தொடர்பில் விரிவாக பேசப்பட வேண்டும்.

லீசிங் நிறுவனங்களின் நடவடிக்கையானது மனித உரிமை மீறலாக மாற்றமடைந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் எந்த வொரு அரசியல் தலைவரோ அல்லது ஊடக நிறுவனமோ பேசவில்லை.

எனவே எனது தலைமையில் வாகன லீசிங் பெற்றுக் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களை பாதுகாக்க ஓர் முன்னணி உருவாக்கப்பட்டு அவர்களுக்காக குரல் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மேர்வின் சில்வா சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-7)

## கூட்டு அரசில் உடன்பாடில்லை

### தலதா அத்துகோரள

(கொழும்பு)

கூட்டு அரசாங்கத்தில் தமக்கு உடன்பாடு கிடையாது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அதுகோரள தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எமது பிரதமர் அளித்த வாக்குறுதி காரணமாக நாம் கூட்டு அரசாங்கத்திற்கு சம்மதம் தெரிவித்தோம்.

அரசியல் ரீதியான விமர்சனங்கள் முரண்பாடுகள் காணப்பட்டாலும் எதிர்க்கட்சியின் எவருடனும தனிப்பட்ட ரீதியான குரோதமோ முரண்பாடுகளோ கிடையாது.

அரசியல் என்பது சண்டை பிடித்துக்கொள்ள வேண்டிய இடமில்லை என்பதே எனது கருத்தாகும்.

யாருக்கு எதிராக குற்றச் சாட்டுக்கள் இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பா?ஐக்கிய தேசியக் கட்சியா? என தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நல்லாட்சியில் நாம் இதனையே எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## தனிக்கட்சியை ஆரம்பிக்குமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனிக்கட்சியொன்றைத் தொடங்கி அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்று பல்வேறு தரப்புகளிடமிருந்து அழுத்தங்கள் கொடுக்கப்படுவதாக தெரிய வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இது தொடர்பான கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மகிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்திருந்தார். [illegible] வித பதிலும் அளிக்கவில்லை.

இந்நிலையில் வார இறுதியில் தங்காலை இல்லத்தில் தங்கியிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு ஏராளம் ஆதரவாளர்கள் திரண்டு வந்திருந்தனர். அவ்வாறு வருகை தந்திருந்த ஆதரவாளர்களும் மகிந்த ராஜபக்ஷ தனிக்கட்சியொன்றைத் தொடங்கி, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

அத்துடன் தற்போதைக்கு உள்ளுராட்சி மன்றங்களில் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் இருக்கும் பலரும் எதிர்வரும் உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குப் பதிலாக தனிக்கட்சியில் போட்டியிடும் ஆர்வத்தை மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது தீவிரமாக ஆலோசித்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களஞ்சியசாலைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும்

## முல்லைத்தீவு மாவட்ட கமக்கார அமைப்பினர் கோரிக்கை

(முள்ளியவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையினரின் களஞ்சிய சாலைகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட கமக்கார அமைப்பினர் கோரிக்கை விடுக்கின்றனர்.**

இதுதொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரத்தை அண்டி வாழும் மக்களைத் தவிர ஏனையோரில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தையே தமது ஜீவனோபாயத் தொழிலாக கொண்டுள்ளனர் கரையோரக் கிராமங்களான கொக்கி ளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, செம்மலை, அளம்பில், உப்புமா வெளி,சிலாவத்தை, முல்லைத்தீவு நகர், முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை போன்ற கிராமங்களில் வசிப்பவர்களில் கூட அநேகமானோர் விவசாயத்தில் ஈடுபடுவது வழமையாகும்.

இவர்கள் தம்மால் உற்பத்தி செய்யப்படும் நெல்லினை இலகுவாக சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக யுத்தத்திற்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் நெல் சந்தைப் படுத்தும் சபையினரின் பெரிய நெல் களஞ்சியசாலை அமைந்திருந்தது. ஆனால்யுத்தத்தின்போது எறிகணை வீச்சினால் அக்களஞ்சிய சாலை முற்றாக அழிவடைந்து விட்டது.

யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இக்களஞ்சியசாலை மீள நிர்மாணிக்கப்படவில்லையென விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர். இதேவேளை முள்ளியவளையிலுள்ள நெற் சந்தைப்படுத்தும் சபையினரின் இரண்டு பெரிய களஞ்சிய கட்டடத்தில் ஒரு கட்டடத்தை உலக உணவுத்திட்ட நிறுவனத்தினர் தமது பாவனையில் வைத்துள்ளனர்.

இதனால் விவசாயிகள் தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லினை வழங்கச் செல்லும்போது களஞ்சியத்தில் இடமில்லை எனக்கூறி விவசாயிகளின் நெல் மூடைகளை திருப்பிவிடும் நிலை அடிக்கடி ஏற்படுகின்றது .

எனவே உலக உணவுத் திட்டத்தினரின் பாவனையிலுள்ள களஞ்சியக் கட்டடத்தினை அரச அதிபர் விடுவித்து' உதவ வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இவற்றைவிட ஒட்டுசுட்டான்,புதுக்குடியிருப்புப் பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவான பொதுமக்கள் நெற் செய்கையில் ஈடுபடுவதனால் ஒட்டுசுட்டான்,புதுக்குடியிருப்பு ஆகிய இரண்டு இடங்களிலும் தனித்தனியாக ஒவ்வொரு நெற் களஞ்சியசாலைகள் அமைக்கப்படவேண்டுமெனவும் அவர்கள் கோருகின்றனர் இவ்விடங்களில் நெற் களஞ்சிய சாலைகள் இன்மையால் நெல்லைக் கொள்வனவு செய்யும் தனியார் வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் விவசாயிகள் ஒருபுறம் வயல்களில் நெல்லை வெட்டிக் கொண்டிருக்கையில் மறுபுறம் இவர்கள் இரவு பகலின்றி காத்து நின்று நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பர். இதனைத் தவிர்த்து விவசாயிகள் நன்மையடையும் வகையில் நெற் சந்தைப்படுத்தும் சபையினரின் களஞ்சியசாலைகள் ஒட்டுசுட்டானிலும் புதுக்குடியிருப்பிலும் சம்பந்தப்பட்டவர்களால் நிர்மாணிக்கப்படவேண்டுமென விவசாயிகள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற் சந்தைப்படுத்தும் சபையினரின் அலுவலகம் இல்லையெனவும் கிளிநொச்சியில் இயங்கும் அலுவலகமே முல்லைத்தீவு மாவட்ட நடவடிக்கைகளையும் கையாள்வதாகவும் இதனால் தமது பிரச்சினைகளை கிளிநொச்சி சென்று தீர்க்க முடியாத நிலையில் தாமுள்ளதாகவும் விவசாயிகள் குறை கூறுகின்றனர்.

இதைப் போக்குமுகமாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கென்றொரு தனியொரு அலுவலகம் முல்லைத்தீவில் செயற்படுவதற்கு அரசாங்க அதிபர் உரிய முறையில் வசதி வாய்ப்பை ஏற்படுத்தி வழிவகுக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர் . (2-302)



பராநதிய சுகாதார பணமனையின ஏறபாடடில வேலட விஷன நிறுவனததின அனுசரணையுடன தாயபபாலூடடல மறறும போசணை மேமபாடடு பேரணியொனறு அணமையில புதுககுடியிருபபில நடைபெறறது.பேரணியானது புதுககுடியிருபபு சநதியிலிருநது ஆரமபமாகி புதுககுடியிருபபு பிரதேச சபை மைதானததை வநதடைநத பினனா விழிப்புணர்வு கருத்துரைகள் வழங்கப்பட்டன. (படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

## அலங்காரத் திருவிழா

(திருவையாறு)

திருவையாறு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

தினமும் காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் மாலை 7 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை பூசைகள் நடைபெறும். மாலை வேளையில் வசந்த மண்டப பூசையும் அடுத்து சுவாமி வெளி வீதி உலா வந்து அடியார்க்கு அருள் பாலிப்பார். (2-273)

## கால்நடைகளுக்கு கால்வாய் நோய்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் வரட்சி நிலையை அடுத்து கால்நடைக்கு கால்வாய் நோய் தொற்று ஏற்பட்டுள்ளது.

இந்நோய் தொற்று கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம் இரணைமடு, கல்மடுநகர், கல்மடு ஆகிய இடங்களிலேயே காணப்படுவதுடன் கால்நடைகளும் இறக்கின்றன.

தடுப்பு மருந்துகள் ஏற்றப்பட்டும் இந்நோய் குறையவில்லை என கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (2-281)

## நான்கு கால்களுடன் அதிசயக் கோழிக்குஞ்சு

வவுனியா மீள்குடியேற்ற கிராம மான ஈஸ்வரிபுரத்தில் கோழியொ ன்று நான்கு கால்களுடன் குஞ்சு ஒன்றை பொரித்துள்ளது.

இந்த அதிசயக் கோழிக்குஞ்சை பொதுமக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (2)






## குடமுழுக்கு விழாவும் மஹாகும்பாபிஷேகமும்

உருத்திரபுரம் எள்ளுக்காடு அருள்மிகு முருகன் தேவஸ்தானத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன ஏக குண்டபக்ஷ பெரும் குடமுழுக்கு விழா நேற்று ஆரம்பமானது.நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம்மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தல் நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 6:40 மணி தொடக்கம் 7:40 மணிவரை மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (2-254)

## திருக்குறள் தமிழ் இலக்கியம் கலைத்திறன் போட்டிகள்-2015

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண்டுதோறும் திருக்குறள் மாநாட்டையொட்டி,திருக்குறள் தமிழ் இலக்கிய கலைத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இவ்வாண்டுக்கான போட்டிகளில் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் எழுத்துத் தேர்வுஆகியவிண்ணப்பங்களைஅனுப்பி வைத்த விண்ணப்ப தாரிக்கு போட்டிகள் நடைபெற வுள்ளன.

இதற்கமைய திருக்குறள் எழுத்துத் தேர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நுழைவு அட்டைகள் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மண்டபங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கண்டாவளைக் கோட்டத்திற்கான நாவன்மைப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி மண்டபத்திலும் பளைக் கோட்டத்திற்கான நாவன்மைப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளி/பளை மத்திய கல்லூரி மண்டபத்தலும், கரைச்சிக் கோட்டத்திற்கான நாவன்மைப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளி/கனகபுரம் உ.நி. பாடசாலை மண்டபத்திலும் நடைபெறும்.

இதேவேளை நாவன்மைக் கலைத்திறன் போட்டிகள் மாவட்ட நிலை (ஆடல், பாடல்,நாடகம்)எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளி/மத்திய கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும்.

போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாமையால் கலைத்திறன் போட்டிகள் மாவட்ட நிலையில் மட்டும் நடைபெறும்.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பிய பாடசாலைகள் மாவட்ட நிலைப் போட்டியில்தவறாதுகலந்துகொள்ளவும்.

தமிழ் இசைப் பாடல்கள்-பாரதியார்,பாரதிதாசன் பாடல்களில் தெரிந்தெடுத்து பாடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## முதியோர் விநாடிவினா போட்டி இன்று

சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் முதியோர் விநாடி வினா போட்டி நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் மேற்படி போட்டி நடைபெறும்.

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சி கண்டாவளை,பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட முதியோர்கள் இப்போட்டியில் கலந்து கொள்வர்.

இவ்வாறு மாவட்ட ரீதியாக போட்டிகளில் வெற்றியீட்டும் முதியோர்களுக்கான தேசிய மட்டப் போட்டி கொழும்பு பத்தரமுல்லயிலுள்ள முதியோர் தேசிய செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனவர்களுக்கு பதில் என்ன சொல்வார்கள் ?




ஆர்ப்பாட்டத்தில்...

காணாமல் போனோர் தினம்... கண்டு பிடிக்குமா ஐ.நா.?

காணாமல் போனவர்களுக்கான சர்வ தேச தினம், ஆண்டுதோறும் ஓகஸ்ட் 30-ம திகதி கடைப்பிடிக்கப்படுகிறது.

தாங்கள் விரும்பாத ஒரு நபரை, ஓர் அரசியல் தலைமையோ, ஒரு இராணுவ தலைமையோ தூக்கிச்சென்றுவிட்டால், அதன் பினனர் அந்த நபரோடு அவரது குடும்பத்தினர் தொடர்புகொள்ள எந்த வழியும் இல்லாமல் போகிறது. அந்த நபர் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்பதுகூட அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவதில்லை.

மனித உரிமைகள் உட்பட பல்வேறு உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்களையோ, போராடுபவர்களையோ அடக்க நினைத்தால், அவர்களைக் காணாமல் போகச் செய்வது என்ற உத்தியை சில நாடுகளின் ஆட்சியாளர்கள் கையாள்கிறார்கள்.

இதுபோன்ற பாதிப்புகளுக்கு ஆளாகுபவர்களை, சட்ட நடவடிக்கைகளுக்கு உரியவர்கள் என்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியும் உரிமை அவர்களின் குடும்பத்தினருக்கு உள்ளது என்றும் ஐ.நா. கூறுகிறது.

ஆனாலும், அவ்வாறு கைதுசெய்யப்பட்டவரை இரகசிய சிறைக்கூடங்களில் அடைத்து வைப்பதோ, படுகொலை செய்வதோ இன்னமும் தொடரத்தான் செய்கிறது.

கைதாகி காணாமல் போவோரின் உறவினர்களின் கூட்டமைப்பு (FEDEDAM) என்கிற ஓர் அரசு சார்பற்ற அமைப்பு, 1981-ம ஆண்டு தொடங்கப்பட்டது. இலத்தீன் அமெரிக்காவில், இரகசியமாக கைதுசெய்யப்படும் முறையை எதிர்த்து இந்த அமைப்பு முதன் முதலாக கோரிக்கை வைத்தது. கொஸ்டாரிக்காவில் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், சர்வதேச மன்னிப்பு சபை, ஐ.நா-வின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியவையும் இந்தப் பிரச்சினைக்காக களத்தில் இறங்கின. இதையடுத்து, மனிதர்கள் காணாமல் போகச் செய்யும் சம்பவங்கள் தொடர்பாக மக்களிடையே ஓரளவு விழிப்பு உணர்வு ஏற்பட்டது.

சென்னை ஐ.நா. அலுவலகம் முன்பாக தமிழக வாழ்வுரிமை கட்சி, காணாமல் போனோர் தினத்தையொட்டி ஓகஸ்ட் 31-ம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தியது. சிங்கள அரசின் அராஜகத்தால் காணாமல் போகச் செய்யப்பட்ட தமிழ் உறவுகளைக் கணக்கெடுத்து மீட்க வேண்டும் என்றும் அந்த அரசுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும் என்றும் அந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய அந்தக் கட்சியின் தலைவர் வேல்முருகன், "தாங்கள் எந்தக் கூட்டணியில் இருந்தாலும் வாக்குக்காக அரசியல் நடத்தமாட்டோம்" என்று உறுதிமொழிந்தார். இந்தக் கூட்டத்தில் பேசிய திராவிட விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் தியாகு போன்ற பலரும் ஈழ மக்களின் வாழ்வுரிமை, காணாமல் போனோரின் மீட்பு குறித்து ஐ.நா. சபையின் நடவடிக்கைகள் பற்றி கண்டனம் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மனித உரிமை செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான சன் மாஸ்டரிடம் மின்னஞ்சல் மூலமாக கருத்துகளைக் கேட்டோம்.

"இலங்கையில் போரின்போதும், போர் முடிந்த பிறகும் ஏராளமானோர் காணாமல் போயினர். இப்போது அது உலகளாவிய பிரச்சினையாக மாறியுள்ளது.




இந்த விடயத்தைப் போராட்டங்கள் மூலம் தொடர்ச்சியாக எடுத்துச் சென்றதன் விளைவாக, ஐ.நா-சபை ஓகஸ்ட் 30-ம் திகதியை 'சர்வதேச காணாமல் போனோர் தினம்' என பிரகடனப்படுத்தியுள்ளது. மனிதனை மனிதனே வேட்டையாடும் இந்த சமூகத்தில் காணாமல் போனவர்களை மீட்க வேண்டும், அதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்பதே இந்த தினத்தின் நோக்கம்.

இதற்காகப் போராடி வந்த மக்களின் ஆதர்ச நாயகன், சுவீடன் நாட்டைச் சேர்ந்த ராவுல் வாலென் பெக். '20-ம் நூற்றாண்டின் மிகச் சிறந்த மனிதாபிமானி' என்று சொல்லப்படும் இவர், தன் வாழ்நாளில் இலட்சத்துக்கும் அதிகமான காணாமல் போனவர்களை மீட்டுள்ளார்.

அதற்காக இவர் சந்தித்த அச்சுறுத்தல்கள் எண்ணிலடங்காதது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்த பின்னரும் காணாமல் போனோர் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. சர்வதேச மன்னிப்பு சபை வெளியிட்ட அறிக்கையில், இப்போதைய நிலவரப்படி 30ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஈழ மண்ணில் காணாமல் போயுள்ளனர். இதுதொடர்பாக அரசு பொய்யான வாக்குறுதிகள் வழங்கிவருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் அவர்களைப் பற்றி விசாரிக்க இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நம்பகத்தன்மை குறித்தும் அந்த சபை கேள்வியெழுப்பியுள்ளது.

இதை உலக மக்களுக்காக எடுத்துச் சென்ற இந்தப் போராட்டம் மக்களிடையே மீண்டும் ஒரு உத்வேகத்தை எழுப்பியிருக்கிறது. ஈழத்தில் நடைபெற்ற போராட்டத்தில் மக்கள் ஜனாதிபதிக்கு, அரசு நியமித்த ஆணைக்குழுவில் நம்பிக்கை இல்லை. இது தொடர்பாக, சர்வதேச விசாரணை தேவை என்று கையெழுத்திட்டு மனு எழுதியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக மனித உரிமை அமைப்புகளும், தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்காகக் குரல்கொடுக்கும் தமிழ் கட்சிகளும் முன்வரவேண்டும். அப்போதுதான் அரசியல் மாற்றம் நிகழ்ந்துள்ள மண்ணில் வருத்தம் தோய்ந்த முகத்தோடு காணாமல்போன உறவுகளை எதிர்பார்த்து இருக்கும் மக்களுக்குத் தீர்வு கிடைக்கும்" என்றார்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்


1233

# நீநி ஜீஜுவைச் சந்தித்த டினிகா?



“வீர தேசம்’ நீநிஜ்ஜு ஒரு குட்டிப் பெண் . அவளை நீநி என்றும் அழைக்கலாம். ஜ்ஜு என்றும் அழைக்கலாம். அவளை நிறையப் பேருக்குப் பிடிக்கும். காரணம் அவள் எல்லோரிடமும் அவ்வளவு அன்போடு பழகுவாள். அவளு க்கு மேஜிக்கவுத் தெரியும். ஆனால் அது கொஞ்சம் ரகசியம். அதை எல்லோரிடமும் காட்டிக் கொள்ள மாட்டாள்.

அன்று உடல்நிலை சரியில்லாததால்நீநி பள்ளிக்குச்செல்லவில்லை. வீட்டில் தனியாகத் தூங்கிக்கொண்



டிருந்தாள். அப்போது டொக்... டொக்... எனக் கதவு தட்டும் சத்தம் கேட்டது. அட யாருப்பா இந்த நேரத் தில்? என்றபடியே எழுந்து சென்று கத வைத்திறந்தாள். வாசலில் நான்கு பெரிய்ய்ய்ய கால்கள் மட்டும் தெரிந்தன. தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள் ஜ்ஜு.

வெளியே பச்சை நிறத்தில் நான்கு மாடி உயரத்துக்கு ஓர் உருவம் நின்றுகொண்டிருந்தது. அதன் பற்கள் நம் கை அளவுக்கு இருக்கும். இரண்டு கண்கள். நீண்ட கழுத்து.

ஆனாலும் நீநி பயப்படவில்லை. அவள் தான் எல்லோருக்கும் பிடித்த வளாயிற்றே எதுக்கு பயப்படனும்?

அதனால் அந்த உருவத்தை பார்த்து என்னப்பா... என்ன வேண்டும்? என்று கை காட்டிக் கேட்டாள்.

அதன் தலை நான்கு மாடி உயரத்தில் இருந்ததால் அதற்கு நீநி பேசுவது கேட்கவில்லை. உடனே ஜ்ஜு பம்பம்போலே பம்பம்போலே என்றமந்திரத்தை கூறினாள். உடனே அவள் அந்த உருவத்தின் உயரத்துக்கு பெரியவளாக மாறினாள்.

ம்... இப்ப சொல்லு என்ன வேணும் உனக்கு? எதற்கு என்னை எழுப்பினே? என்று கேட்டாள். நான் இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன். ரொம்ப பசிக்குது. சாப்பிட ஏதாச்சும் தாயேன் என்றது அது.

தர்றேன். ஆனா நீ இவ்வளவு பெருசா இருந்தா எப்படி வீட்டுக்குள்ளே வருவே? என்று கேட்டாள் நீநி.

அது திகைப்புடன் யோசித்தது. கவலைப்ப டாதே என்ற நீநி பம்பம் போலே பம்பம்போலே என்ற மந்திரத்தைச் சொல்லி அதன் தலையில் ஒரு குட்டு குட்டினாள். உடனே அது நாய்குட்டி அளவுக்கு மாறிவிட்டது. நீநியும் அவளுடைய சாதாரண உருவத்துக்கு வந்து விட்டாள். வா என வீட்டுக்குள் சென்றாள்.

ஐஸ்கிரீம் சாப்பிடுறியா?

ஐஸ்கிரீமா ...அப்படின்னா?

ஐஸ்கிரீம்ன்னா ஐஸ்கிரீம்தான்; என்ன சுவை யில் இருக்கும்?

ஐஸ்கிரீம் மாதிரிதான் இருக்கும்:

வேற ஏதாச் சும் இருக்கா?

நூ்டுல்ஸ் சாப் பிடுறியா?

வேணாம். கஞ்சி கிடைக்குமா? என்று கேட்டது அது. நீநிக்கு கஞ்சி வைக்கத் தெரியாது. ஆனாலும் சமையல் புத்தகத்தில் இருந்ததைப் படித்து செய்து விடலாம் என்ற நம்பிக்கையில்அந்தவிலங்கை உட்காரச்சொல்லி விட்டு சமையல் அறைக்குச் சென்றாள்.

புத்தகத்தில் சொன்னது மாதிரியே பாத்திரத்தில் தண்ணீர் வைத்து கொஞ்சம் அரிசி போட்டு கொஞ்சம் உப்பும் போட்டாள் குட்டியான அந்த விலங்கு சமையல் அறையின் உள்ளே வந்து திட்டு மீது ஏறி பாத்திரத்தை ஆர்வமாகப் பார்த்தது. சீக்கிரம் தயாராகாதா என்று கேட்டது.



அப்போ கொதகொத குள்ளா... கொதகொத குள்ளா,னு சொல்லிட்டு இரு. சீக்கீரம் தயாராகிடும் என்றாள் நீநி.

அந்த விலங்கும் கொதகொத குள்ளா...கொத கொத குள்ளானு சொல்லிக்கொண்டே இருந்தது. கஞ்சியும் சீக்கீரம் தயாரானது.

அந்த சூடான பாத்திரத்தை துணியால் பிடித்து எடுத்து வந்து முன் அறையில் வைத்த நீநி சூடு குறைய ஒரு கரண்டியால் துழாவினாள்.

ஆமா நீ யாரு? எங்கிருந்து வர்றே என்று கேட்டாள். எங்களை டைனோசர்னு கூப்பிடுவாங்க. நான் ஆறரைக்கோடி வருஷத்துக்கு முன்னாடி இருந்து வர்றேன்.

இப்போ ஊர் உலகம் எப்படி இருக்குனு பார்க்கலாம்,னு வந்தேன் என்றது அது. ஓ...நீதான் டைனோசரா? உன் பேரு என்ன டைனோசர் என்று கேட்டாள் நீநி.

பேரா அப்படினா? எனக்கு நீநிஜ்ஜுனு பேரு. எங்க அப்பா, அம்மா, ஃப்ரெண்ட்ஸ் எல் லாம் நீநி,னு கூப்பிடுவாங்க. உன்னை எப்படி கூப்பிடுவாங்க? என்று கேட்டாள். எனக்கு பேரு எல் லாம் இல்லை.

நீயே ஒரு பேரு வையேன் என்றது டைனோசர்.

நீநி கொஞ்ச நேரம் யோசித்து விட்டு டினிகா... நல்லா இருக்கா? என்றாள். டினிகா... நல்லா இருக்கே என்றது அது குஷி யாக.

அதற்குள் கஞ்சி ஆறியிருந்தது. டினிகா அதனை ருசித்துக் குடித்தது. நேரமாச்சு நான் கிளம்புறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்பியது டினிகா.

நீநிஜ்ஜுவும் உறங் கச் சென்று விட்டாள்.

கொஞ்சநேரத்தில்டொக்... டொக்...



என்று மீண்டும் கதவு தட்டப்பட்டது. திறந்து பார்த்தால், மீண்டும் டினிகா. இப்ப என் னப்பா? என்று கேட்டாள் நீநி . என்னைக் குட்டியா மாத்தினியே... திரும்ப பெருசா மாத்து. எங்க கூட்டத்துல என்னைச் சேர்த்துக்க மாட்டேங்கிறாங்க என்றது டைனோசர்.

ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்... ஸாரிப்பா மறந்தே போயிட்டேன் என்ற நீநிஜ்ஜு மந்திரத்தை சொன்னாள். பம்பம் போலே பம்பம்போலே

▲▲▲▲▲▲▲▲▲▲

## 09.2015 07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1522 - பேர்டினண்ட் மகலனின் விக்டோரியா கப்பல் உயிர் தப்பிய 18 பேருடன் ஸ்பெயினை வந்தடைந்து, முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த கப்பல் என்ற பெயரைப் பெற்றது.
- 1620-வட அமெரிக்காவில் குடியேறுவதற்காக இங்கிலாந்தின் பிளைமவுத் துறையிலிருந்து யாத்திரிகர்கள் புறப்பட்டனர்.
- 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கென்டக்கியின் படூக்கா நகரைக் கைப் பற்றினர்.
- 1863-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் தென் கரோலினாவின் மொறிஸ் தீவிலிருந்து விலகினர்.
- 1873 - இலங்கையில் புதிதாக வடமத்திய மாகாணம் அமைக்கப்பட்டு, மொத்தம் இலங்கையின் மாகாணங்கள் ஏழாக அதிகரிக்கப்பட்டது. ஜே. இ. டிக்சன் அதன் முதலாவது அரச அதிபரானார்.
- 1885 - கிழக்கு ருமேலியா பல்கேரியாவுடன் இணைந்தது.
- 1930-ஆர்ஜெண்டீனாவின் அதிபர் ஹிப்போலிட்டோ இரிகோயென் இராணுவப் புரட்சியையடுத்து பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1936 - கடைசி தாஸ்மானியப் புலி தாஸ்மானியா, ஹோபார்ட்டில் இறந்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: தென்னாபிரிக்கா ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1946 - இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி டி. எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - கனடாவின் முதலாவது தொலைக்காட்சி நிலையம, ஊடீகுவு-வுஏ, மொன்ட்றியாலில் திறக்கப்பட்டது.
- 1951 - தினமலர் நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1965 - இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியா பாகிஸ்தானைத் தாக்கி, லாகூரை ஒரு மணி நேரத்தில் கைப்பற்றப் போவதாக அறிவித்தது.
- 1968 - சுவிஸ்சர்லாந்து ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1970 - ஐரோப்பாவிலிருந்து நியூயோர்க் சென்று கொண்டிருந்த இரண்டு பயணிகள் விமானங்கள் பாலஸ்தீனத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு ஜோர்தானுக்குக் கொண்டு செல்லப்பட்டது.
- 1991 - ரஷ்யாவின் லெனின்கிராட் நகரம் மீண்டும் சென் பீட்டர்ஸ்பேர்க் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1997 - வேல்ஸ் இளவரசி டயானாவின் உடல் அடக்கம செய்யப்பட்டது. 2.5 பில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் இந்நிகழ்வைப் பார்த்தனர்.
- 2006 - ஐரோப்பியத் தமிழ் வானொலி, மக்கள் தொலைக்காட்சி ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.

### பிறப்புகள்

- 1968 - சாயிட் அன்வர், பாகிஸ்தானின் துடுப்பாளர்

### இறப்புகள்

- 1998 - அகிரா குரோசாவா, ஜப்பானியத் திரைப்படத் துறையாளர் (பி. 1910)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டுவரும் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி

**நன்நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டுவரும் தேர்தல் வெற்றிகள் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**



இந்தத் தேர்தலும் பொது மக்களின் குரலொலியாக. ஒலிக்கும் ஆரவார வெற்றிப் பேரொலியாகும். கடந்த ஜனவரி 8 ஆம் திகதியன்று நாட்டின் பாதுகாப்பினை மாற்றியமைத்துக் கொண்ட அதே அரசியல் பாதுகாப்பினை வெளிப்படையாகவே மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் கடந்த 18, 19 ஆம் திகதிகளில் பெறப்பட்ட தேர்தல் வெற்றி மூலம் அழுத்தம் திருத்தமாய் மீண்டும் அடித்துக்கூறியதும் அதே மக்களின் குரலொலிதான்.

நாட்டுமக்களின் விருப்பப்படி நாட்டின் எதிர்காலம் பற்றிய மற்றும் வேறு சிலரது சொந்த அபிலாசைகள்- விருப்புக்கள் பற்றிய பிரதிபலிப்புக்களாகவேதான் அது இருந்தது.

இவ்விதமே தேர்தல் ஆணையாளர் தேர்தலை நடத்தி முடிக்க உதவிய அவரது சிவில் இராணுவமாகிய பொதுச்சேவையினர் மற்றும் பொலிஸ் பிரிவினர் போன்றோருமாக பெருமளவில் சமாதானம்-சுதந்திரம்- நீதியுமான ஒரு தேர்தல் கால கட்டத்திற்குள் நாட்டினை இட்டுச் சென்றது மக்களது விருப்பத்தையே பிரதிபலிக்கின்றதென்பது குறிப்பிடத்தக்க ஓர் விடயமேயாகும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நம்பகமான விதத்தில் ப்யனளிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த போதிலும் தேர்தலில் வெற்றி பெறுவதென அவர் மேற்கொண்ட சபதம் முறியடிக்கப்பட்டதாயிற்று. கடந்த தேர்தல்களின் போது அவர் தனது அதிகாரத்தின்கீழ் முழுமையாகவே துஷ்பிரயோகம் செய்திருந்த அரச உடைமைகள் என்ற அம்சத்தினை இந்தத் தடவை அவரால் பயன்படுத்த முடியாது போயிற்று.

இந்தத் தடவை மகிந்த ராஜபக்ஷவுக்கு அல்லாது நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய் முன்னணி மற்றும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமே மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்குவதென மக்கள் விரும்பினர்.

இரண்டு கூட்டணிகளின் போட்டிக்கிடையில் அகப்பட்டு பாதிப்பிற்குள்ளாகிப் போன நிலையே ஜே.வி.பியின் நிலையாயிற்று. தனித்துப் போட்டியில் இறங்கியபோதே வாக்குகள் பெறும் விடயத்தில் தரத்திலும் பார்க்க வெளிப்பார்வைக்கான கவர்ச்சிப் பெறுமானமே பெரிதும் மதிக்கப்படுகிறதென்பதை அது உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

இன்றைய காலத்தில் 'துள்ளுப்பாட்டு' கலாசாரத்திற்கே பெரிதும் பழக்கப்பட்டுப் போயிருக்கும் புதிய தலைமுறையொன்றின் முன்னால் தர்க்கரீதியான வாழ்வியல் சித்தாந்தப் பேச்சுக்களிலும் பார்க்க பேரணியொன்றின் இறுதி யில் இடம்பெறும் பாட்டு இசை நிகழ்ச்சிகளுக்கே கவர்ச்சிகரமான மதிப்பு அதிகமென்பதுடன் அரசாங்கமொன்றை ஆதரிப்பதா இல்லையா என்றவித தீர்மானமற்ற நிலைப்பாடு காரணமாக இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு வாக்குறுதிகளை அவர்களால் வழங்க முடியாதிருந்ததும் அவர்களுக்கான வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை. அண்மைக்காலங்களில் தவறுகளுக்கே இட மில்லாதவர்கள் போல் சட்டங்களை உருவாக்கிவரும் ஜே.வி.பியினது இச்சாதனைகள் அவர்களது கடந்த கால வன்முறைச் சட்டமீறல்களுக்குச் சான்று பகர்வதாகவே உள்ளன.

பொதுவான வாக்குகளில் ஏற்படக்கூடிய பிளவுகள் எதுவும் மகிந்த ராஜபக்ஷவுடைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு ஆதாயமாகிவிடும் என்ற அச்சமே நல்லாட்சிக்கான தேசிய ஐக்கிய முன்னணி நோக்கியதான அவர்களது இறுதி நிமிட ஈர்ப்புக்குக் காரணமாகி முன்னணிக்கான அவர்களது உள்வருகையும் சாத்தியமாகிற்று.



நிகழ்ந்த தேர்தலின் முழுப் பெறுபேறுகளின்படி ஜேவி.பி. ஏமாற்றமடைந்திருக்க முடியாது என நம்பலாம். வடக்கில் விடுதலைப்புலிகள் போலவே ஜே.வி.பியினரும் சமூகக் காரணங்களின் நிமிர்த்தம் பாராளுமன்ற முறைகள் மூலம் திருப்திகொள்ள முடியாத அடிப்படைவாத இளைஞர்களாகவே இருந்தனர்.

எனவே அதற்குப் பதிலாக ஆயுதக் கிளர்ச்சியொன்றையே அவர்கள் விரும்பினர். இதற்கென அவர்கள் பெரும் விலையையே கொடுக்க வேண்டியதாகவிருந்ததுடன் நாடும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

தெற்கையும் வடக்கையும் சேர்ந்த இந்த இளைஞர் தரப்புக்களிரண்டும் தத்தமக்கேயுரித்தான 'அரசியல் அதிகாரம்', பொருத்தமான 'தகவிடம்' போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் மாற்றுவழிகளை தேடிச்செல்வதற்கு இடமளிக்காமல் ஜனநாயக ரீதியில் பாராளுமன்றத்தினூடாக அவர்களது வளர்ச்சிக்கான இடமளிக்கப்பட வேண்டும்.

எனவே புதிய பாராளுமன்றத்தினால் தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும்போது, தற்போது தெற்கிலும் வடக்கிலும் முறையே நடைமுறையிலிருக்கும் இருகட்சி ஆதிக்கமும் முற்றுமுழுதான ஒரே கட்சி ஆதிக்கமும் கருத்திற்கொள்ளப்படவேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அணியிலிருந்து அரச தரப்பிற்கு கட்சித் தாவல்கள் இடம்பெற்றால் அல்லது தேசிய அரசாங்கமொன்று அமைந்தாலன்றி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசானது சட்டவாக்க சபையில் செயல் ரீதியான பெரும்பான்மை பலத்தின்பொருட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தங்கியிருக்கும் தற்போதைய உண்மை நிலையானது தேசிய மீள இணக்கப்பாட்டிற்கு நல்லதுதான்.

ஆனாலும் தென்பகுதி இதயபூமியான முக்கிய பிரதேசப் பகுதிகளின் எட்டு மாவட்டங்களில் எதிர்க் கட்சி பெற்ற வெற்றி என்ற யதார்த்த நிலையுடனான முரண்பாட்டை சீர்தூக்கிப் பார்த்தால் இதனால் ஆகக் கூடிய பின்விளைவுகள் பற்றி கருத்திற்கொள்வது தவிர்க்கப்படலாகாது என்பதே உண்மை. இனவாதப் பறை ஒலிக்கப்பட்டு எதிர்ப்பலை உருவாக்கப்படுமென்று கூறிவிடமுடியாது.



இந்தத் தேர்தலானது கட்சிகள் எவ்விதமாக வாக்குகளைப் பெற்றிருந்தார்கள் என்பதற்கான நியாயபூர்வ பிரதிபலிப்பொன்று என்பது மட்டுமல்லாது வாக்காளப் பெருமக்கள் வெற்றிபெற்ற தனித்தனி அபேட்சகர்களை என்ன நோக்கத்திற்காக தெரிந்து கொண்டனர் என்பதற்குமானதேயாகும்.

இத்தேர்தல் மதில்மேல் பூனை போன்று உறுதியான தீர்மானமின்றி சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அரசியல்வாதிகளை தோற்கடித்திருந்த போதிலும் ஜனாதிபதி தனது சொந்தக் கட்சிக்குள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக தோன்றிய அதிகார இழுபறி போன்ற நிலைமைகளிடையேயும் தனது பக்கம் அவர்களை திரும்பவும் கொண்டுவந்து சேர்த்துக்கொண்டார்.

நல்லவர்கள், கெட்டவர்கள் மோசடிப் பேர்வழிகள் அனைவரும் பாகுபாடின்றி ஒரேவிதமாகவே வெற்றி பெற்றிருந்தனர். இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியலில் முதன்மையாக இடம் பெற்றிருந்த கொலைச் சந்தேகநபர் ஒருவர் பற்றிய விடயத்தை ஓர் எடுத்துக்காட்டாக இங்கு குறிப்பிடலாம்.

இதேவிதமாகவே பெறுமதியான சிறப்புப் பிற்புலம் கொண்டிருந்த அபேட்சகர்கள் சிலர் தேர்தலில் நிராகரிக்கப்பட்டுமுள்ளனர். ஓகஸ்ட் சபைக் கூட்டங்களின்போது மன்றில் நிகழ்ந்த வாதப் பிரதிவாதங்களில் இப்படி ப்பட்டவர்களின் பங்காற் றல் போதியளவில் வெளிப்பட்டிருந்திருக்கும்.

இது வாக்காளர்களின் தகைமைக்குறைபாட்டையேயன்றி அபேட்சகர்களது குறைபாட்டைப் பிரதிபலிப்பதாகாது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பதவியை எதிர்பார்த்து காத்திருக்கிறார் எச்.எம்.பௌசி

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி தனக்கு கிடைக்கும் என்று தான் இன்னும் எதிர்பார்ப்பில் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சையோ, பிரதியமைச்சர் பதவியையோ தான் ஏற்கப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

பௌசி, இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின். தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவானார்.

100 நாள் அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவி வகித்த ஏ.எச்.எம். பௌசி, நேற்று முன்தினம் நடந்த அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் வைபவத்தில், சத்தியப் பிரமாணம் செய்யவில்லை.

இது குறித்து அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ள பௌசி, அது ஜனாதிபதிக்கு இருக்கும் உரிமை, அவற்றை ஜனாதிபதி நிறைவேற்றுவார். ஜனாதிபதியின் தீர்மானத்திற்கும் நாம் அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

நான் கட்சியில் இருக்கும் சிரேஷ்ட உறுப்பினர் என்பதை ஜனாதிபதி அறிவார், குறிப்பாக முஸ்லிம் மக்களின் நலனுக்காக பணியாற்ற முடிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இருக்க வேண்டும்.

ஏனைய அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டவர்கள். இதனால், அமைச்சர் பதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றேன் என ஏ.எச்.எம். பௌசி மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவுக்கு அமைச்சுப் பதவி குருநாகல் மக்கள் எதிர்பார்ப்பு

முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்கள் அறிவித்துள்ள கொள்கைக்கமைய குருநாகல் மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தும் வகையில் மகிந்தவுக்கு, அமைச்சு வழங்கப்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இதன்மூலம் குருநாகல் மாவட்ட மக்களுக்கு மகிந்த சேவையாற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தில் வெற்றியடைந்த க்ட்சியில் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள் ளாதவர்களுக்கு மாவட்ட அமைச்சு பதவிகளை வழங்குமாறு அரசாங்க தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

அதற்கமைய குருநாகல் மாவட்டத்தில் வெற்றியடைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அமைச்சு பதவி கிடைக்காத மகிந்த ராஜபக்ஷவுக்கு மாவட்ட அமைச்சர் பதவி கிடைக்க வேண்டும் என்பது மக்கள் கருத்தாகும்.

தேர்தலின் பின்னர் மகிந்த ராஜபக்ஷவின் முகத்தை பார்க்கவில்லை என்பதனால் மாவட்ட அமைச்சராக மகிந்த ராஜபக்ஷ தங்கள் மாவட்டத்திற்கு வரும் வரையில் மக்கள் காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 24 05 1955

இறப்பு 08 08 2015

### மாணிக்கம் சண்முகராசா

அந்தியேட்டி-07.09.2015 திங்கட்கிழமை

கண்ணீருக்கு தடை போட்டது போல<br>
உம் நினைவுகளுக்கு தடை போட முடியவில்லை<br>
நினைவுகளை மட்டும் நிறையவே தந்துவிட்டு நீர் எங்கு சென்றீரோ!<br>
நாட்கள் முப்பத்தியொன்று ஆனபோதும் ஆறவில்லை எம் மனது<br>
தூண்டு சுடரொளியாய் எமைக்காத்து வாழ்ந்தவரே<br>
ஆண்டவன் தாள் சேர்ந்திட்ட அன்புருவமானவரே<br>
நீண்ட வழி நோக்கி நித்தமும் ஏங்குகிறோம்<br>
உன் ஆன்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்!

82/17, 3 ஆம் ஒழுங்கை,<br>
பருத்தித்துறை வீதி,<br>
யாழ்ப்பாணம்.

தகவல்:<br>
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 09.11.1946

உதிர்வு 08.08.2015

### அமரர் பாலசிங்கம் லோகப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்<br>
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

எமது குடும்பத்தின் தலைவனாக எம்மை வழி நடத்தி உயர்வுகளைப் பெற்றுத் தந்ததோடு, சமூகத்திற்காகவும் அரும்பணிகள் ஆற்றிய எமது அன்புத் தெய்வத்திற்கு 31 ஆம் நாள் நினைவஞ்சலி செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மேலும் எம் குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில் கலந்து ஆறுதல் அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆலங்குழாய் வீதி,<br>
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்<br>
021-205 2815

(1684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசினால் அமைச்சர்களைக்கூட இதுவரை நியமிக்க முடியவில்லை

## பந்துல குணவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்க்கட்சி தற்போது எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலைமை குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் என்ற வகையில் தாம் உட்பட அணியொன்று, முன்னணியின் தலைவரான ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளாார். இலங்கையின் புதிய அரசாங்கத்தினால் அமைச்சர்களைக் கூட இதுவரை முழுமையாக நியமித்துக்கொள்ள முடியாமல் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



ஒகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்த அரசியல் கட்சிக்கும் அரசாங்கத்தை அமைக்கும் அளவுக்கு ஆசனாங்கள் கிடைக்கவில்லை. இதனால், தற்போதைய அரசாங்கம் கூட்டணி அரசாங்கமே.

அரசாங்கத்தில் இணைந்து கொள்ளாத மீதமுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை கட்சியையும் அரசாங்கத்தையும் விமர்சிக்காது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து சுயாதீனமாக விமர்சிக்க ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது சிங்களம், தமிழ், முஸ்லிம் என எண்ணாது எதிர்க்கட்சியில் உள்ள பெரும்பான்மை பலத்திற்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும.

56 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரி யிருந்தது போல், எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் உள் பிரச்சினை என்ற போதிலும் முன் னணியின் புதிய செயலாளர் ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடாது முன்னணியின் யாப்பை மீறியுள்ளார். இந்த இக்கட்டான நிலைமைக்கு அவரே காரணம்.

இவ்வாறான நிலைமையின் கீழ் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இருப்பு கடினமான சந்தர்ப்பத்தில் உள்ளது.

இதனால், முன்னணியின் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், அதன் தலைவரான ஜனாதிபதியுடன் கலந்துரையாடி, இவ்வாறான பல அரசியல் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க உள்ளனர் என பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 200 | 120 |
| தக்காளி | 60 | 30 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 60 | 80 | 70 |
| கரட் | 140 | 100 | 140 | 70 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 90 |
| பயற்றங்காய் | 40 | 30 | 60 | 30 |
| லீக்ஸ் | 60 | 100 | 80 | 80 |
| பீற்றூட் | 30 | 20 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 150 | 200 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 120 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 25-60 | 35-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 250 | — | 250 |
| வெங்காயப்பூ | 150 | 150 | - | 100 |
| முள்ளங்கி | 30 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 25 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 481


சிந்தியா சிந்தியா




கோபால் துவா




சுதன் சர்மா




ஜெயராசா ஜெயகீர்த்தன்




கதிரமலை கார்த்திக்




ராகுலன் பாலா

"டேய் மச்சான் நம்ம கவர்மெண்ட் சரியில்லடா"

"ஏன்டா மச்சி"

"இல்ல மச்சான் நேத்து ஊருக்கு போயிட்டு வரும் போது வழியில பார்த்தேன் ஒரு இடத்துல விபத்து பகுதி மெதுவாக செல்வும்னு போர்டு வச்சிருக்கானுங்க"

"சரிடா நல்ல விஷயம் தானே"

"கொய்யால....அதான் விபத்து பகுதின்னு தெரியுதுல... அப்புறம் எதுக்கு அங்கபோய் ரோடு போடணும்,அங்க கொண்டு போர்டை வைக்கனும்"......

tamilmyreaction.blogspot.com

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமா வரலாறு

## உலகின் முதல் பேசும் படம் "ஜாஸ் சிங்கர்" 01




இருபதாம் நூற்றாண்டில் மனிதன் கண்டுபிடித்த உன்னத சாதனங்களில் முக்கியமான ஒன்று சினிமா.

இன்று உலகில் சினிமா காட்சிகள் நடைபெறாத நாடுகள் இல்லை. சினிமா பார்க்காத நபர்கள் அபூர்வம். இந்தியாவில் சினிமாதான் இரண்டாவது பெரிய தொழில்.

தமிழ்த் திரைப்பட வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு முன் சினிமா எப்போது கண்டுபிடிக்கப்பட்டது, முதல் சினிமா படம் எது என்பது போன்ற விபரங்களை அறிந்து கொள்வது அவசியம்.

### சினிமாவின் தொடக்க காலம்.

பொருட்கள் அசைவதைப் படமாக்கும் முயற்சியில் 1826ஆம் ஆண்டு முதலே பல்வேறு விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். அதற்கான கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1872 இல் குதிரைகளின் கால்கள் அசைவதைச் சிலர் வெற்றிகரமாகப் படம் பிடித்தனர். அதற்காக 24 கமெராக்கள் பயன்படுத்தப்பட்டன. இதில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு 1889 இல் தோமஸ் அல்வா எடிசன் 35 எம்.எம் பிலிமில் சினிமா படம் எடுக்கும் முறையைக் கண்டு பிடித்தார்.

எடிசன் 1894 வரை பல ஆராய்ச்சிகள் செய்யும் அசையும் சினிமா படத்தைக் காட்டும் கருவியைத் தயாரித்தார்.

1895இல் லூமிரே சகோதரர்கள் ஒரு ரயில் ஓடுவதையும் அது ரயில் நிலையத்தில் போய் நிற்பதையும் படமாக்கி ரசிகர்களிடம் கட்டணம் வசூலித்து திரையிட்டுக் காட்டினார்கள்.

அக்காட்சியைப் பார்த்த சில ரசிகர்கள் பயந்து ஓட்டம் பிடித்தார்கள். இதன் பின் சினிமா படத்துடன் ஒலியையும் பதிவு செய்யும் முறையை தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்தார்.

ஜெர்மனி விஞ்ஞானிகள் சிலரும் சினிமாப் படம் தயாரிப்பில் சில முன்னேற்றங்களைக் கண்டுபிடித்தளர்.

### ஊமைப் படங்கள்

இதைத் தொடர்ந்து மௌனப் படங்கள் தயாரிக்கப்பட்டன. பேச்சு இல்லாவிட்டாலும் பிண்ணணி இசை உண்டு. இந்தக் காலகட்டத்தில் கொடி கட்டிப் பறந்தவர் சார்லி சாப்ளின்.

பேசமால் சைகைகள் மூலமாகவே நகைச்சுவையை வெளிப்படுத்தி அகில உலகப் புகழ் பெற்றார்.

### பேசும் படம்

1926 இல் வார்னர் பிரதர்ஸ் நிறுவனம் முதல் பேசும் படத்தைப் தயாரித்தது. இது சிறிய படம் பெயர். டான்டுவான். பரீட்சார்த்தமாகத் தயாரிக்கப்பட்ட இந்தக் குறும்படம் வெற்றிபெற்றதால் அடுத்த ஆண்டே தி ஜாஸ் சிங்கர் என்ற படத்தை வார்னர் பிரதர்ஸ் தயாரித்தனர். முதல் முழு நீளப் பேசும் படமான தி ஜாஸ் சிங்கர் 1927 ஒக்டோபர் 6ஆம் திகதி திரையிடப்பட்டது.

திரையில் நட்சத்திரங்கள் ஆடுவதையும் பாடுவதையும் பேசுவதையும் கணடு ரசிகர்கள் பிரமித்துப் போனார்கள்.

முதல் பேசும் படத்தை உலகுக்கு அடுத்த ஹொலிவுட் தொடர்ந்து உலகின் புகழ் பெற்ற திரைப்படக் கேந்திரமாக விஸ்வரூபம் எடுத்தது.



### ஹொலிவுட் உருவான கதை

அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் ஒரு பகுதியாக விளங்குகிறது ஹொலிவுட்.

1883 இல் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து 7 மைல் தூரத்தில் சுமார் 120 ஏக்கர் நிலத்தை ஒருவர் வாங்கி வீட்டு மனைகளாக பிரித்து விற்கத்திட்டமிட்டார்.பத்திரப் பதிவின் போது அந்தப் பகுதியின் பெயர் ஹொலிவுட் என்று குறிப்பிட்டது.

1907 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் ஸ்டுடியோக்களை அமைக்க நியூயோர்க் பிலிம் டிரேஸ் ஊக்கமளித்தது. அதன் பின் கொலம்பியா பரமௌன்ட் ஆகிய நிறுவனங்கள் அங்கே பிரமாண்டமான ஸ்ரூடியோக்களை அமைத்தன. பிறகு மேலும் பல ஸ்டுடியோக்கள் உருவாகின.

1930ஆம் ஆண்டிலிருந்து ஹொலிவுட்டில் சினிமா படத் தயாரிப்பு சூடு பிடிக்கத் தொடங்கியது. ஆண்டுக்கு சராசரியாக 750 படங்கள் தயாரிக்கப்பட்டன. (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 272

## அஹங்காரத்தை விடுதல்

மிகப் பொறுப்புணர்வுள்ள அந்த மனிதனோ ஊன் உறக்கமின்றி வெகு காலம் அங்கேயே இருந்தான்.

அவனது பொறுப்புணர்வுவைக் கண்டு கடவுள் அவன் முன் தோன்றி அவனை அரவணைத்துக் கொண்டார். விடுதலையும் தந்தார்.

நீங்கள் யாரிடம் சரணடைகிறீர் கள் என்பது முக்கியமல்ல. பூரண சரணாகதி செய்யும் எண்ணமே உங்கள் வாழ்க்கையை ஆனந்தமயமான ஒன்றாக மாற்றவல்ல ஆற்றல் பெறறது; நீங்கள் சரணடையும் பொழுது பிரபஞ்ச இருப்புத் தன்மையான தீர்க்க முடியாத சக்திக்குச் சொந்தக் காரராகிறீர்கள்.

பிறகு உங்கள் வழியில் வரும் எதையும் உங்களால் எதிர் கொள்ள முடியும். நீங்கள் உறுதியாகவும் எதுவரினும் அசைக்க முடியாதவராகவும் ஆகிவிடுகிறீர்கள். உங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கு மிகுந்த ஆறுதலையும் ஆதரவையும் தருபவராகிறீர்கள்.. அவர்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் கண்ணுக்குத் தெரியாத கைகளை உங்கள் மூலம் உணர்கிறார்கள். நீங்கள் சரணடையாவிடில் உங்கள் அஹங்காரம் உங்களை எல்லையற்ற தன்மையில் கலந்து விடாமல் பின்னோக்கி இழுத்து வைக்கிறது என்று பொருள்.

அதனால் நீங்கள் தானாகவே உங்கள் வளங்களிலும் சக்தியிலும் ஒரு எல்லைக்குப்பட்டவராகி விடுவீர்கள்.

ஒரு குருவானவர் நீங்கள் சரணடைவதற்கு ஒரு கருவியாக இருந்து உதவுகிறார். சரணடைவது என்பதற்கு யாரையும் காரத்தை கரைப்பதற்கு அவர்களுடைய உதவியை எடுத்து கொள்கிறீர்கள் என்பதுதான் அதன் அர்த்தம்.



சொல்லுங்கள்...

ஸ்வாமிஜி தயவு செய்து எங்களுக்கு தியானத்தைப் பற்றியும் அது எவ்வாறு அஹங்காரத்தையும் இழக்க உதவுகிறது என்பது பற்றியும் இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்ல முடியுமா?

நிச்சயமாக.. முதலில் தியான முறைகள் எவ்வாறு வந்தது என்பது பற்றிச் சொல்லுகிறேன்.

மனிதன் தான் படைக்கப்பட்டதிலிருந்தே இந்த அற்புதமான பிரபஞ்சத்தைப் படைத்தது எது? என்று ஆச்சரியமடைந்து கொண்டும் ஆராய்ந்து கொண்டும் இருந்தான்.

இந்த அழகான பூமியைப் படைத்தது ஆகாயத்தில் உருளவிட்டது எது? நதிகளைப் பாயச் செய்வதும் மலைகளை வளரச் செய்வதும் எது?

இவற்றையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கும் ஆற்றல் அல்லது சக்தி ஒன்றிருக்கிறது என்ற முடிவுக்கு வந்தான்.

ஒரு பிரமாண்டமான இருப்பு சக்தியே இந்த மொத்தக் காட்சியையும் நடத்திக் கொண்டிருக்கிறது. என்ற முடிவுக்கு வந்தான். பிறகு எவ்வாறு அந்த சக்தியுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது என்று வியப்படையத் தொடங்கினான். இந்த முடிவுக்கு வந்த இதைப் பற்றி ஆராய்ந்த இந்த சக்தியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டே முதல் மனிதர்க்ளே ரிஷிகள் அல்லது தன்னையுயர்ந்த ஆத்மாக்கள் அல்லது ஞானமடைந்த குருமார்கள்.


(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தைப் பரப்பும் முயற்சிகள் தொடர்கின்றன

## அமைச்சர் அர்ஜுன குற்றச்சாட்டு



(கொழும்பு)

**நாட்டில் இன்னமும் சில தரப்புகள் இன வாதத்தை பரப்புவதற்கு நடவடிக்கை மேற் கொண்டு வருவதாக துறைமுகங்கள் மற் றும் கப்பல் போக்கு வரத்து அமைச்சர் அர் ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

பிரதான கட்சிகள் இரண்டு ஒன் றாக இணைந்து நாட்டில் நல்லா ட்சியை பாதுகாப்பதற்கு மேற்கொ ண்டிருக்கும் முயற்சிகள் மிகவும் பெறுமதியானதெனவும் இது தொட ர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இருப்பினும் சிலர் மீண்டும் அதிகாரத்திற்கு வருதற்காக பெரிய அளவிலான முயற்சிகளில் ஈடுபட் டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கிடைத்த வெற்றியினை ஒரு போதும் பின் திரும்ப இடமளிக்க போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து சிங்கள ஊடக மொ ன்று செய்தி வெளியிட்டுள்ளது.(இ-7)

# எதிர்க்கட்சி தலைவர் தெரிவில் சபாநாயகர் மீது தவறில்லை!

## உதய கம்மன்பில கூறுகிறார்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் நியம னம் தொடர்பில் சபாநாயகர் கரு ஜய சூரிய மீது எந்த தவறும் இல்லை என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளும ன்ற உறுப்பினருமான உதய கம்ம ன்பில தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக்கொள்ளும் எதிர் பார்ப்பு இல்லை என முன்னணி யின் தலைவரான ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேனவின் ஆலோசனை யின் பிரகாரம் பொதுச் செயலாளர் விஸ்வா வர்ணபால, சபாநாயக ரிடம் கடிதம் ஒன்றை கையளித்தி ருந்ததாகவும் கம்மன்பில தெரிவித் தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் அனுமதியை பெறாமல் அந்த கடிதம் வழங்கப் பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி செயலாளரின் கடிதத்தை அடிப்படையாக கொண்டு நாடா ளுமன்றத்தில் அடுத்த பெரிய கட்சி யாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க சபா நாயகர் தீர்மானித்தார்.

இதனால், எதிர்க்கட்சித் தலை வர் தெரிவு தொடர்பில் சபாநாயகர் மீது எந்த தவறும் இல்லை எனவும் கம்மன்பில மேலும் தெரிவித்து ள்ளார். (இ-7)



வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1, 2 அறிமுக விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற போது.

# நான் கட்சியின் தீர்மானம் காரணமாகவே அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டேன்

## தயாசிறி ஜயசேகர விளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியக் குழுவின் தீர்மானத்தின் படியே தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொ ண்டதாக தயாசிறி ஜயசேகர தெரி வித்துள்ளார். பொதுத்தேர்தல் முடிவு களின்படி எந்தக்கட்சியும் தனித்து அர சாங்கத்தை அமைக்க முடியாது.

இந்தநிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இரண்டு வருட இணக்கத்துடன் தேசிய அரசாங் கம் அமைக்கப்பட்டதாக அவர் கொழும்பின் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.



தேசிய அரசாங்கத்தில் தாம் இணையப்போவதில்லை என்று சில ஊடகங்கள், பொய்யான தக வல்களை வெளியிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் தாம் ஒருபோதும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணை யப்போவதில்லை என்று தயாசிறி மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கழுதை மீது ஊர்வலம்!

ஓர் ஊரில் ஒரு ஆள் இருந்தான். அவனுக்கு வெளிநாட்டுக்கு போக வேண்டும் என்று ஆசை.

ஆனால் அவனுக்கு எந்த மொழியும் தெரியாது. இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து கொண்டு புறப்பட்டான்.

ஏதோ ஒரு தேசத்துக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே அவனுக்கு யாரையும் தெரியாது. அவர்கள் என்ன மொழி பேசுகிறார்கள் என்பதும் தெரியாது. என்ன செய்வது என்று யோசித்தபடி ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தான். எதிரே ஒரு பெரிய கட்டடம். நிறையப் பேர் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். இவனும் அவர்கள் பின்னாலேயே உள்ளே போனான். அங்கே ஒரு பெரிய அறை.

உள்ளே அழகாக அலங்காரம் பண்ணியிருந்தார்கள். நிறையப் பேர் அங்கே சாப்பிடுவதற்காக உட்கார்ந்திருந்தார்கள். இவனுக்கும் நல்ல பசி.

அவர்களோடு சேர்ந்து உட்கார்ந்தார். சாப்பாடு போட்டார்கள். சாப்பிட்டான். அன்பான உபசரிப்பு... இவன் மனசுக்குள் நினைத்துக் கொண்டான். இது ஏதோ ஒரு அரசருடைய அரண்மனை போல இருக்கு.. இன்றைக்கு ஏதோ விருந்து நடக்கும் போலிருக்கிறது. நல்ல வேளை... இந்த சமயம் பார்த்து நாமும் வந்தோம். வயிறார சாப்பிட் டோம். நம்ம பசியும் தீர்ந்தது. இப்படி நினைத்த படி நிமிர்ந்தான்.

சாப்பாடு பரிமாறியவன் எதிரே ரெம்பவும் பணிவோடு முதுகை வளைத்து வணக்கம் தெரிவித்தான். இவனும் பதிலுக்கு எழுந்து நின்று முதுகை வளைத்து வணக்கம் தெரிவித்தான்.

“ரெம்ப நன்றி” என்றான்... அவன் பணிவுடன் ஒரு சீட்டை இவன் கையிலே கொடுத்தான். இவன் அதை வாங்கிப் பார்த்தான். என்ன எழுதியிருக்கிறது என்று ஒன்றும் புரியவில்லை.

“சரி... இந்த நாட்டில் தங்களுடைய நன்றியை சீட்டிலே எழுதித் தான் கொடுப்பார்கள் போல இருக்கிறது, என்று நினைத்துக் கொண்டு மறுபடியும் “ நன்றி” என்றான்.

ஆனால் அவன், “காசைக் கொடுங்கள்” என்றான். ஏனென்றால் அது ஒரு ஹோட்டல். இவன் சாப்பிட்டதற்கான பில் அது. இவன் அதை புரிந்து கொள்ளவே இல்லை. நன்றி என்று சீட்டில் எழுதிக் கொடுக்கிறார் கள் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதை வாங்கி சட்டைப் பையிலே பத்திரமாக வைத்துக்கொண்டு, “பரவாயில்லைங்க... ரெம்ப மகிழ்ச்சி” என்றான்.

“ஒரு வெளிநாட்டுக்காரனுக்கு இவ்வளவு தூரம் மரியாதை பண் றீங்களே... எங்க ஊருக்கு போனதும் உங்களைப் பற்றி சொல்லுவேன்” என்றான். இவன் என்ன சொல்கிறான் என்று அவனுக்கு புரிய வில்லை. இவனை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய் முதலாளிக்கு முன்னால் நிறுத்தினான்.

“நாங்கள் சொன்னதிலே இவனுக்கு ரெம்ப பெருமையா இருக்கும் போலிருக்கு. அதுதான் பெரிய இடத்திற்கு அழைச்சிட்டு வந்திருக்கான்” என்று இவன் நினைத்துக் கொண்டான்.

அவரும், “பில்லுக்கான பணத்தைக் கொடு” என்றார்.

“பரவாயில்லைங்க... ரெம்ப மகிழ்ச்சி” என்றான் இவன். அவர் பார்த்தார். இவனை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். இவன் என்ன நினைத்துக் கொண்டான் தெரியுமா?

“நம்மளை இந்த ஊர் ராஜா முன்னாடி கொண்டு வந்து நிறுத்தி யிருக்காங்களே... என்ன ஒரு பெருந்தன்மை” என்று நினைத்துக் கொண்டான். நீதிபதி சொன்னான் “நீ சாப்பிட்டதுக்கான பணத்தை உடனே கொடுத்துடு இல்லைன்னா... அதுக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டியிருக்கும்”

ராஜாவே நமக்கு நன்றி சொல்கிறார் என்று நினைத்துக் கொண்டு, “என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லீங்க...!” என்றான்.

அவர் பார்த்தார். இவனுக்கு தண்டனை கொடுப்பதை தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்தார். உடனே தீர்ப்பு வழங்கினார்.

“இவனைக் கழுதையிலே பின் புறமாக உட்கார வையுங்கள். இவன் ஒரு மோசக்காரன் என்று ஒரு புறம் எழுதி அந்தக் கழுதையை ஊர் பூராக விரட்டி விடுங்கள்”. என்று தீர்ப்பளித்தார். இவனுக்கு தான் மொழி புரியவில்லையே. அதனால் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு பேசாமல் நின்றான். ஆனாலும் ஏதோ நடக்கிறது என்று மட்டும் புரிகிறது. எல் லோரும் சேர்த்து இவனைக் கழுதையின் மேலே உட்கார வைத்தார்கள்.

“ஓகோ... நம்மைப் பாராட்டி ஊர்வலம் நடத்துறாங்க போலிருக்கு” என்று நினைத்துக் கொண்டான். எல்லோரும் சத்தம் போட்டு கைதட்டிக் கொண்டு கழுதை பின்னால் ஓடி வருகிறார்கள். இவனுக்கு உற்சாகமாக இருக் கிறது. எல்லோருக்கும் கை கூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்டே போகி றான். கூட்டத்தின் நடுவே திடீரென்று ஒரு தெரிந்த முகம். அவனது தேசத்தைச் சேர்ந்த ஓர் ஆள். அவனைப் பார்த்ததும் இவனுக்கு மேலும் உற்சாகம்.

“நம் ஊருக்கு போனதும் இங்கு நமக்கு கிடைத்த மரியாதை எல்லாம் உண்மைதான் என்று சொல்வதற்கு ஒரு சாட்சியும் கிடைத்து விட்டது” என்று நினைத்துக் கொண்டான். அவனைப் பார்த்துக் கத்தினான்.

“நல்லா பாத்துக்க... இந்த ஊர் மக்கள் எனக்கு எப்படிப்பட்ட வரவேற்பு கொடுக்கிறார்கள் என்று...” அவனுக்கு அவமானமாய் போயிற்று தலையைக் குனிந்து கொண்டே நழுவிப் போய்விட்டான். இவன் பார்த்தான் அவன் தலை தெரியவில்லை. “ஆஹா... அவனுக்கு நம்ம மேல பொறாமை... அதுதான் காணாமற் போய்விட்டான்” என்று நினைத்துக் கொண்டான். இப்படி ஒரு வேடிக்கை கதையை பெரியவர் கள் சொல்வதுண்டு. கதை வேடிக்கையாக இருந்தாலும் இதிலே உள்ள கருத்தை கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

அந்த கழுதை மீது உட்கார்ந்திருக்கிறானே... அவன் மாதிரி தான் நானும். அகங்காரம் என்ற கழுதையின் மீது உட்கார்ந்து கொண்டிருக் கிறோம். என்ன நடக்கிறது என்பதே நமக்கு புரிவதில்லை.

அகங்காரத்தில் பேசுகிறவனுக்கும் சித்த சுவாதீனம் இல்லாமல் பேசுகிறவனுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதில்லை.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசிகளாலேயே தோற்கடிக்கப்பட்ட மகிந்த



மகிந்தவின் விசுவாசிகளே மகிந்தவின் தேர்தல் தோல்விக்குக் காரணம். தேர்தல் பரப்புரைக்கு தலைமை தாங்குவதற்கு மைத்திரியை மகிந்த அனுமதித்திருந்தால், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றி ருக்கும். மகிந்தவின் விசுவாசிகள் மகிந்தவை மட்டுமல்ல ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் தோற்கடித்துள்ளனர்.

இவ்வாறு சிலோன் ரூடே நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் உபுல் ஜோசப் பெர்னாண்டோ.

தேர்தலுக்கு முன்னர் நுகேகொடவில் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் நடத்தப்பட்ட பொதுக் கூட்டம் ஒன்றில் மகிந்த 5.8 மில்லியன் வாக்குகளைப் பெற்றுக் கொள்வார் என பெருமையுடன் அறிவித்தனர்.

இந்நிலையில் மகிந்த நான்கு மில்லியன் வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொள்வார் என ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்தார்.

இதனை எதிர்த்து மகிந்த எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்காத போதிலும் அவரது ஆதரவாளர்கள் ரணிலுக்கு எதிராக சவால் விடுத்தனர்.

மகிந்த தேர்தலில் போட்டியிட்டால் அது தனக்கு ஆபத்தாக இருக்கும் என ரணில் அச்சமுறுவதாக மகிந்தவின் ஆதரவாளர்கள் விமர்சித்தனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட போது, 'தேர்தலில் போட்டியிடுங்கள். பயந்து ஓடவேண்டாம்' என ரணில், மகிந்தவிடம் தெரிவித்தார். இந்த சவாலை அடுத்து, மகிந்த வாய் திறந்தார்.

'ரணில் இரு தடவைகள் எனக்குப் பயந்து தேர்தலில் போட்டியிடவில்லை. இத்தடவை அவர் என்னடமிருந்து தப்பிவிட முடியாது. இவர் இத்தேர்தலில் என்னிடம் நிச்சயம் தோல்வியுறுவார்' என மகிந்த அறிவித்தார். இக்கருத்தை மகிந்த வெளிநாட்டு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்திருந்தார்.

இருபது தேர்தல்களில் தோல்வியுற்ற ஒருவர் தன்னிடம் சவால் விடுவதாகவும் மகிந்த சுட்டிக்காட்டியிருந்தார். இந்த விதத்திலேயே மகிந்த தேர்தலில் களமிறங்கினார்.

ரணில் பொதுத்தேர்தலில் போட்டியிடுகிறார் என்பதாலேயே மகிந்தவும் இதில் போட்டியிடத் தீர்மானித்தார். ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்ற மகிந்த ராஜபக்ஷ, உதய கம்மன்பில மற்றும் காமினி லொக்குகே ஆகிய இருவரும் அவரைக் குழப்பும் வ்ரையில் அமைதியாகவே இருந்தார். இதன் பின்னர் விமல் வீரவன்சவும் வாசுதேவவும் இந்த அணியில் இணைந்து கொண்டனர்.

'ஐயா, நீங்கள் தெற்கு சிங்கள வாக்குகளின் ஊடாக வெற்றி பெற்றீர்கள். அடுத்த பொதுத் தேர்தலில் ரணில் தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளமாட்டார். அந்த வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கே கிடைக்கும். இத்தேர்தல் சிங்கள பௌத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்டதாகும். சிங்கள பௌத்த வாக்காளர்கள் ரணிலை வெறுக்கின்றனர்.

ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் பெற்றுக்கொண்ட 5.8 மில்லியன் வாக்குகளைப் பெற்றுக் கொண்டால் தேர்தலை இலகுவாக வெல்வீர்கள்' என மகிந்தவின் கூட்டாளிகள் மகிந்தவிற்கு உந்துதல் வழங்கினர்.

மகிந்தவின் சகபாடிகளின் கணிப்பீட்டிற்கு அமைவாகவே மகிந்த தேர்தலில் தான் வெற்றி பெறுவேன் என்கின்ற அதீத நம்பிக்கையுடன் களமிறங்கினார். இதனைத் தொடர்ந்து தனக்கு ஆதரவான கூட்டங்களை ஒழுங்குபடுத்துமாறு மகிந்த தனது ஆலோசகர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக்கு மைத்திரி தலைமை தாங்கினால் தாம் மகிந்த தலைமையிலான பிறிதொரு கட்சியின் கீழ் தேர்தலில் போட்டியிடுவதெனகின்ற தீர்மானத்தை மகிந்தவின் ஆலோசகர்கள் முன்வைத்தனர்.

மகிந்தவிற்கு மைத்திரி தேர்தலில் போட்டியிட நியமனத்தை வழங்காவிட்டால் பிறிதொரு கட்சியின் கீழ் போட்டியிட்டு மகிந்தவுக்குச் சொந்தமான வாக்குகளுடன் நாடாளுமன்றில் நுழைவதென இவர்கள் தீர்மானித்தனர். இந்தவகையில் நாடு பூராகவும் மகிந்தவுக்கு ஆதரவான கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

'மகிந்தவுடன் அணி சேர்வோம்' என்ற எண்ணக்கருவின் கீழ் தேர்தல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. உள்ளூர் அரசாங்க உறுப்பினர்களின் ஊடாக மகிந்தவுக்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டுவதற்காக நிதி வழங்கப்பட்டது. நாடு முழுவதிலும் மகிந்தவுக்கு ஆதரவான வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மக்கள் கருதுமளவுக்கு மகிந்தவின் விசுவாசிகளால் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

மகிந்த தற்போது 5.8 மில்லியன் வாக்காளர்களைத் தன்வசம் வைத்திருப்பதாக மக்கள் மத்தியில் நம்பிக்கை ஊட்டப்பட்டது. இதனுடன் மேலும் ஒரு மில்லியன் வாக்குகளைத் தான் வழங்குவதாக விமல் வீரவன்ச வாக்குறுதி அளித்தார். இதனை நுகேகொடவில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் விமல் தெரிவித்திருந்தார்.

விமல் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக தனது கட்சி உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்குவதிலேயே குறியாக இருந்தார். இதன்மூலம் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் தோற்கடிக்கப்பட்டு இவர்களுக்குப் பதிலாக விமலின் கட்சி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனாலேயே மகிந்தவின் 5.8 மில்லியன் வாக்குகள் குறைவடைந்து 4.7 மில்லியன் வாக்குகளாக மாறின. ஆகவே விமல் மகிந்தவுக்கு ஒரு மில்லியன் வாக்குகளை அதிகரிப்பதற்கு துணைபோகவில்லை. மாறாக ஒரு மில்லியன் வாக்குகளைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளையே விமல் முன்னெடுத்திருந்தார்.

மகிந்தவின் விசுவாசிகளே மகிந்தவின் தேர்தல் தோல்விக்குக் காரணமாகும்.

மைத்திரி தேர்தல் பரப்புரையைத் தலைமை தாங்குவதற்கு மகிந்த அனுமதித்திருந்தால், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும். ஆகவே மகிந்தவின் விசுவாசிகள் மகிந்தவை மட்டுமல்ல ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் தேர்தலில் தோல்வியுறச் செய்துள்ளனர்.

இதனை அறிந்திராத ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் 'மகிந்தவுடன் அணி சேர்வோம்' என்ற எண்ணக்கருவிற்கு ஆதரவளித்தனர். இதனால் மகிந்த தமக்காக அரசாங்கத்தை அமைப்பார் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்த மைத்திரியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் தோல்வியுற்றனர்.

இறுதியில் மகிந்தவும் அவரது அணியினரும் புலிகள், தேசத் துரோகி மற்றும் அமெரிக்காவின் கைக்கூலி எனத் தம்மால் பெயர்சூட்டப்பட்ட ரணிலால் தோல்வியுற்றனர். மகிந்தவின் தந்திரோபாயத்தை ரணில் வெற்றி கொண்டார்.

மகிந்த தன்னுடன் இருப்பதாகக் கூறப்பட்ட அலாவுதீனின் விளக்கை அணைப்பதில் ரணில் வெற்றி கொண்டார். மகிந்தவின் கையில் குவிந்திருந்த 'சூனியப் பந்தின்' அதிகாரத்தை ரணில் நிர்மூலமாக்கியுள்ளார்.

மகிந்த 2010ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை. ஆனால் இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 60 சதவீத வெற்றிகளைப் பெற்றது. ஐ.தே.க 30 சதவீத வெற்றியைப் பெற்றது. தற்போது நடந்து முடிந்த தேர்தலில் மகிந்த போட்டியிட்டார். ஆனால் ஐ.ம.சு.மு 4.7 மில்லியன் வாக்குகளை மட்டுமே பெற்றது.

ரணில் இத்தேர்தல் மூலம் தனது வாக்கு வங்கியை 5.1 மில்லியனாக உயர்த்தியுள்ளார். இராணுவக் குடும்பங்கள் அதிகம் வாழும் குருநாகலில் தான் வெற்றி பெறுவேன் என மகிந்த கருதினார். இந்த மாவட்டத்தில் தான் சிறந்த வெற்றியைப் பெற்றுக் கொள்வேன் என மகிந்த நம்பினார்.

மகிந்தவின் குருநாகல் மாவட்டத்திற்கான தேர்தல் பரப்புரை கோத்தாவால் மேற்கொள்ளப்பட்டது. குருநாகல் மாவட்டத்தில் வாழும் இராணுவக் குடும்பத்தினரின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே கோத்தா தேர்தல் பரப்புரையில் களமிறக்கப்பட்டார்.

குருநாகல் மாவட்டத்தில் ஐ.தே.க சார்பில் அகில விராஜ் போட்டியிட்டார். இந்நிலையில் குருநாகலில் ஐ.தே.க தோல்வியுறும் என அனைவரும் எதிர்பார்த்தனர். மகிந்தவுடன் ஒப்பிடுகையில் அகில மிகவும் அற்பமானவர் எனக் கருதப்பட்டார்.

2010ல், மகிந்த போட்டியிடாது குருநாகல் மாவட்டத்தில் ஐ.ம.சு.மு 63.84 சதவீத வாக்குகளைப் பெற்றது. இதில் ஐ.தே.க 31.78 வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டது. இத்தேர்தலில் குருநாகல் மாவட்டத்தின் 10 தேர்தல் தொகுதிகளில் ஐ.ம.சு.மு வெற்றி பெற்றது. ஐ.தே.க ஐந்து தேர்தல் தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றது.

ஆனால் இந்தத்தடவை மகிந்த, குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு 49.26 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டார். 2010 தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிடும் போது இது மிகவும் குறைவாகும். இம்முறை குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட அகில ஐ.தே.கவின் வாக்கு வீதத்தை 45.85 சதவீதமாக உயர்த்தியுள்ளார்.

ஐ.ம.சு.மு பெற்றுக் கொண்ட பத்து ஆசனங்கள் எட்டு ஆசனங்களாகக் குறைவடைந்தன. இதேவேளையில் ஐ.தே.கவின் ஆசனங்கள் ஐந்திலிருந்து ஏழாக அதிகரித்துள்ளன.

இவ்வாறான தேர்தல் பெறுபேறுகள் மகிந்தவின் ஆதரவு குறைவடைந்துள்ளதையே சுட்டிக் காட்டுகின்றன. இறுதி ஜனாதிபதி தேர்தலில், குருநாகல் மாவட்டத்தில் மகிந்த 556,868 வாக்குகளைப் பெற்றிருந்தார். இது பொதுத் தேர்தலில் 474,124 ஆகக் குறைவடைந்துள்ளது. குருநாகலில் மகிந்த படுதோல்வியடைந்துள்ளார்.

போர் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் மக்கள் மத்தியில் மகிந்தவிற்கான ஆதரவு அதிகரித்திருந்தது என்பது உண்மையே. ஆனால் இது கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் குறைவடைந்துள்ளது. மகிந்தவிற்கான ஆதரவு ஓகஸ்ட் 17 பொதுத் தேர்தலின் பின்னர் முற்றிலும் குறைவடைந்துள்ளது.

ஆரம்ப நாட்களில், சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கும் மக்கள் தமது அதிக ஆதரவை வழங்கியிருந்தனர். சிறிமாவோக்கு கிடைத்துள்ள மக்களின் ஆதரவைப் பார்த்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன அச்சங் கொண்டிருந்தார். இதனால் 1982 ஜனாதிபதி தேர்தலில் சிறிமாவோவைப் போட்டியிடாது தடுப்பதற்காக இவரது சிவில் உரிமையை ஜே.ஆர்.பறித்தார்.

மைத்திரியும் ரணிலும் மகிந்தவின் விடயத்தில் ஜே.ஆரின் முறையைப் பின்பற் றுவார்கள் என எல்லோரும் நினைத்தனர். ஆனால் மைத்திரி ஒருபோதும் இதனை நடைமுறைப்படுத்தவில்லை. பதிலாக, மைத்திரி, மகிந்தவிற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் நியமனத்தை வழங்கினார்.

ஜே.ஆர், சிறிமாவைத் தோற்கடிக்க முடியாது என அச்சங் கொண்டிருந்தார். ஆனால் ரணில் எவ்வித அச்சமுமின்றி மகிந்தவை எதிர்கொண்டார். ரணில் இதனை சிங்கள பௌத்த வாக்குகளின் ஊடாக நிறைவேற்றினார்.

இது மிகவும் போட்டிமிக்க தேர்தல் எனவும் இதனாலேயே ரணில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் மகிந்த விசுவாசிகள் கூறினர்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியுற்று விட்டது என்பதற்கான பொறுப்பை எடுத்துக் கொள்ளாது அதனைத் தட்டிக்கழிப்பதற்கான மூலோபாயமாகவே இது நோக்கப்படுகிறது.

1994ல், ஐ.தே.கவும் இதே நடைமுறையைப் பின்பற்றியது. அந்த ஆண்டு சந்திரிகா தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால் இவர் 105 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டார். 17 ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்த ஐ.தே.க 94 ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்தது.

சந்திரிகாவின் மக்கள் கூட்டணி 3,887,823 வாக்குகளையும் ஐ.தே.க 3,498,453 வாக்குகளையும் பெற்றுக் கொண்டன. நாடாளுமன்றில் சந்திரிகா ஒரு ஆசனத்தை மட்டுமே அதிகம் பெற்றிருந்தார். எந்தவேளையிலும் சந்திரிகாவின் நாடாளுமன்றைத் தாம் கலைப்போம் என ஐ.தே.க சூளுரைத்தது.

1997 உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க தோல்வியுற்றது. இரண்டு பத்தாண்டுகளாக ஐ.தே.க எதிர்க்கட்சியாக இருந்துள்ளது. இன்று நாடாளுமன்றில் ஐ.தே.க 106 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஐ.ம.சு.மு 95 ஆசனங்களைப் பெற்றுள்ளது. இதில் வெற்றியாளருக்கும் தோல்வியாளருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 366,258 ஆகும்.

ஆகவே ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனிவருங் காலங்களில் முற்றிலும் தோல்வியுறுமா? ஆனாலும் இதனை இப்போது எதிர்வு கூறமுடியாது. இதற்கான காலம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.

1994ல் இலங்கை ஜனாதிபதி ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராவார். இன்று இலங்கை ஜனாதிபதியாக இருப்பவர் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் உள்ளார். மாறாக ஐ.தே.க தலைவர் இன்று ஜனாதிபதியாக பதவி வகிக்கவில்லை.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான சீட்டிழுப்பு வெற்றியாக இது அமைந்துள்ளது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைக்கத் திட்டமிட்டால், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்தவினதும் அவரின் விசுவாசிகளின் பிடியிலிருந்தும் தன்னை விலக்கிக்கொள்ள வேண்டும்.

**மொழியாக்கம் - நித்தியபாரதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இனத்தலைவர் ஐ.எஸ்.தாக்குதலில் பலி

## மேலும் 26 பேர் உயிரிழப்பு, 50 பேர் காயம் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்





(டமாஸ்கஸ்)

**சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய இரட்டை கார் குண்டு வெடிப்பில் சிறுபான்மையின் தலைவர் உட்பட 26 பேர் பலியாகியுள்ளனர்.**

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக ஸ்வைதா நகரில் டீரூஸ் என்னும் சிறுபான்மையினர் போராடி வருகின்றனர். சிரியாவில் மட்டும் இலட்சம் டீரூஸ் இனத்தவர் வசிக்கின்றனர்.

இந்த இனத்தின் தலைவர்களில் ஷேக் வாஹித் அல்பலோஸ் பலம் வாய்ந்தவர் ஆவார். தனது இனத்துக்கென்று ஒரு போராளிக் குழுவை உருவாக்கி இவர் ஸ்வைதா நகரின் பெரும்பகுதியை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

இவரைக் கொல்வதற்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பலமுறை முயற்சி மேற்கொண்டனர். எனினும் அது பலிக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஸ்வைதா நகருக்கு வெளியே அல்பலோஸ் தனது காரில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவருடைய காரில் தீவிரவாதிகள் மறைத்து வைத்திருந்த குண்டு வெடித்தது. இதில் அல்பலோசும் அவருடன் சென்றவர்களும் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.

இந்த தாக்குதல் நடந்த சிறிது நேரத்திலேயே சிரியாவின் தகிர் அல்ஜபால் நகரில் ஒரு வைத்திய சாலை அருகே வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த காருக்குள் தீவிரவாதிகள் வைத்த குண்டுகள் வெடித்தன.

அப்போது அந்த வழியாகச் சென்றவர்கள் நாலாபுறமும் தூக்கி வீசப்பட்டு பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த 2 கார் குண்டுகள் வெடிப்பு தாக்குதல்களிலும் மொத்தம் 26 பேர் பலியானதாகவும், 50க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தாகவும் சிரியாவுக்கான மனித உரிமை கண்காணிப்பு மையத்தின் தலைவர் ரமி அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

தங்களது தலைவர் கொல்லப்பட்டதால் ஆத்திரமடைந்த டீரூஸ் இனத்தவர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு ஸ்வைதா நகரில் அரசு அலுவலங்கள் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சில இடங்களில் அரசு அலுவலங்கள் சூறையாடப்பட்டன.


நகரில் நிறுவப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ஹபீஸ் அல் ஆசாத்தின் (தற்போதைய ஜனாதிபதியின் தந்தை) சிலையையும் அவர்கள் அடித்து நொறுக்கியுள்ளனர்.

2 கார் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

எனினும், ஐ.எஸ். தீவிர வாதிகள்தான் இந்த தாக்குதல் களின் பின்னணியில் இருக்க வேண்டும் என்று சிரியா அரசாங்கம் சந்தேகிக்கிறது. (3-7)

# கடலில் மூழ்கி உயிரிழந்த சிறுவனால் கனேடிய அரசாங்கம் சர்ச்சையில்









துருக்கியிலிருந்து கிரேக்கத்துக்கு சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற படகில் பயணித்து கடலில் மூழ்கி உயிரிழந்த சிரிய குர்திஷ் இனத்தைச் சேர்ந்த 3 வயது சிறுவன் அயிலனின் புகைப்படங்கள் வெளியாகி உலகளாவிய ரீதியில் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ள நிலையில், அவனது தந்தை அந்த சிறுவனின் சடலத்தையும் அவனுடன் நீரில்மூழ்கிஉயிரிழந்த அவனது சகோதரன் மற்றும் தாயின் சடலங்களையும் நல்லடக்கம் செய்வதற்காக சிரிய கோபேன் நகருக்கு கடந்த வெள்ளிக்கிழமை திரும்பியிருந்தார்.

இந்நிலையில் இறந்த சிறுவனான அயிலனின் அத்தையான கனடாவில் வசிக்கும் தீமா குர்தி கூறுகையில், அயிலனின் குடும்பத்தனர் கனடாவில் புகலிடம் கோரியிருந்ததாகவும் ஆனால் கனேடிய அரசாங்கம் அவர்களது புகலிடக் கோரிக்கையை நிராகரித்தமை காரணமாகவே அவர்கள் இநத ஆபத்து மிக்க படகுப் பயணத்தை மேற்கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். அவரது குற்றச்சாட்டிற்கு கனடா மறுப்புத் தெரிவித்துள்ளது.

அவ்வாறான புகலிடக் கோரிக்கை விண்ணப்பம் எதுவும் கடலில் மூழ்கிப் பலியான சிறுவனின் தந்தை அப்துல்லாஹ் குர்தியால் சமர்ப்பிக்கப்படவில்லை என கனேடிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்துல்லாஹ் குர்தியின் சகோதரனால் அந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததால் அதனை தாம் நிராகரிக்க நேர்ந்ததாக அவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் தீமா குர்தி கூறுகையில், அப்துல்லாஹ் குர்திக்கான புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து, தாம் அவரைத் தமது ஏற்பாதரவில் கனடாவுக்கு வரவழைக்கத் திட்டமிட்டிருந்ததாக தெரிவித்துள்ளார். நேர்மையுடன் நான் கூறுவது என்னவென்றால், நான் இந்த சம்பவத்துக்கு கனேடிய அரசாங்கத்தை மட்டும் குற்றஞ்சாட்டவில்லை. முழு உலகையுமே குற்றஞ்சாட்டுகிறேன் என அவர் தெரிவித்தார்.

அகதிகளை ஏற்றுக்கொள்ளாமை குறித்து கனேடிய பழைமை வாத கட்சியைச் சேர்ந்த பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் எதிர்க்கட்சியினரின் கடும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளார்.

கனேடிய அதிகாரிகள் 25,000 சிரிய அகதிகளை நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்க வேண்டும் என அந்நாட்டு எதிர்க்கட்சியான லிபரல் கட்சியின் தலைவர் ஜஸ்டின் திருடியு வலியுறுத்தியுள்ளார்.

மேற்படி விவகாரத்தால் கனேடிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் அலெக்ஸாண்டர், எதிர்வரும் ஒக்டோபர் மாத தேர்தலில் மீளப் போட்டியிடுவதற்கான தனது பிரசார நடவடிக்கையை பகுதியாக இரத்துச் செய்யத் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. (3-7)


# அயிலனின் தந்தைக்கு பல்லுப்பிடுங்கிய ஐ.எஸ்

துருக்கியிலிருந்து கிரேக்கத்துக்கு சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற படகில் பயணித்து கடலில் மூழ்கி உயிரிழந்த சிரிய குர்திஷ் இனத்தைச் சேர்ந்த 3 வயது சிறுவன் அயிலனின் தந்தையான அப்துல்லாஹ் குர்தி கடந்த வருடம் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதாகவும் அதன்போது அவருண்டய பற்கள் அனைத்தையும் பிடுங்கி தீவிரவாதிகள் அவரைச் சித்திரவதை செய்திருந்ததாகவும் தீமா குர்தி கூறியதாக கனேடிய ஊடகவியலாளரான தெர்றிகிளேவின் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தீவிரவாதிகளிடமிருந்து ஒருவாறாகத் தப்பி தனது குடும்பத்தினருடன் இணைந்து கொண்ட அவர், பின்னர் எல்லையைக் கடந்து துருக்கிக்குள் பிரவேசித்ததாக கூறப்படுகிறது.

அதன் பின் அவர்களுக்கு அந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான விசா வழுங்கப்படாததால் அவர்கள் படகுப் பயணத்தை மேற்கொள்ளும் முடிவுக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி படகுப் பயணத்தின் போது உயிரிழந்த அயிலனின் தாயாரான ரெஹான், தனக்கு நீச்சல் தெரியாது என்பதால் அளவுக்கதிகமான குடியேற்றவாசிகளை ஏற்றிச் செல்லும் படகில் பயணத்தை மேற்கொள்ள அஞ்சுவதாக கணவரின் சகோதரி கூறியதாக தீமா குர்தி தெரிவித்துள்ளார். தொலைபேசிமூலம் தன்னைத்தொடர்பு கொண்டு உரையாடிய வேளையிலேயே ரெஹான் இவ்வாறு தெரிவித்திருந்ததாக அவர் கூறினார். (3-7)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்ற விசாரணை சட்டவிரோதம்

# ஐ.நாவுக்கு எதிராக அமரசேகர வழக்கு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு எதிராக வழக்குத் தொடர உள்ளதாக தேசப பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். இலங்கையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் சட்டவிரோதமானவை. இந்த விசாரணை அறிக்கையை இரத்து செய்யுமாறு கோரி வழக்குத் தொடரப்பட உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**



அமரசேகர

குறித்த விசாரணை அறிக்கையை இரத்து செய்யுமாறு கோரி இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதி சுபீ நெண்டிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய உள்ளார்.

ஏற்கனவே இது குறித்து நெனடிக்கு நிபந்தனைக் கடிதமொன்றை குணதாச அமரசேகர அனுப்பி வைத்துள்ளார். சட்டத்தரணி கபில கமகே ஊடாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹூசெய்ன் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு முதல் இலங்கை தொடர்பில் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஒரு தலைப்பட்சமானவை. பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தை இலங்கைக்கு வழங்கவில்லை.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட விதம் ஐக்கிய நாடுகள் பிரகடனங்களுக்கும் புறம்பானது என குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த பிழையை ஒப்புக்கொண்டு விசாரணை அறிக்கையை இரத்து செய்து மன்னிப்பு கோராவிட்டால் வழக்குத் தொடர நேரிடும் என குணதாச அமரசேகர தெரிவித்துள்ளதாக கொழும்பு வார இறுதி பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

### எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் முன் கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்று

#### மகிந்த தரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்று எனவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மகிந்த தரப்பினர நாடாளுமன்றத்தில் தனித்து எதிர்க்கட்சியாக செயற்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில் தாம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனை எதிர்க்கட்சி தலைவராக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டோர் இது தொடர்பில் சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அதில், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதியன்று தாம் நாடாளுமன்றத்தில் தனியான தரப்பாக அமரப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன், எதிர்க்கட்சி தலைவராக ஏற்றுக்கொள்ளப் பட்டமையானது, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் அடிப்படையிலேயே செயற்படுத்தப்பட்டது என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-7)

# நன்நம்பிக்கைகளையும்....

*(11ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அண்மைக்கால பாராளுமன்ற விவாதங்களின் போது ஆவேசமான வார்த்தைப் பிரயோகங்கள், கீழ்த்தரமான பேச்சுக்கள் பொருளற்ற விதமான கூத்துக்காட்சிகள் போன்றவையே சபையில் அரங்கேறுவதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. பெறுமதியான பிரதிபலிப்புக்களை காண்பதே அரிதாக இருக்கிறது. பாராளுமன்றத்தின் 'அதிகார அவைப் பதிவேடு' (Official Hansard) போன்றவற்றை ஆராய்ந்து பார்த்தால் தற்போது போன்ற குதர்க்கம் அல்லது விதண்டாவாதப் பேச்சுக்கள் போல் அல்லாது முன்னைய காலங்களில் பொருள் பொதிந்த சிறப்பான வாதப் பிரதிவாதங்களையே அதில் நாம் காணக்கூடியதாயிருக்கும்.

சுதந்திரத்திற்கு முந்திய யுகத்தின்போதான நிறைவேற்று அதிகார சபை மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் போன்றவற்றில் தேசிய சட்டவிதிகள்-கொள்கைகள் விடயங்கள் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்வதற்கான ஆய்வுக் கலந்துரையாடல்கவின் போது தெரிந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளும் முழுமையாகவே கலந்து பங்குபற்றுவது போன்ற உண்மையான தேசிய அவைகளாகவே பாராளுமன்றினை மாற்ற விரும்புவதாக பிரதமர் அடிக்கடி கூறிவந்திருக்கிறார்.

நாம் தற்போதும் நடைமுறையில் பின்பற்றுவது போன்று 'அரசு' மற்றும் 'எதிர்க்கட்சி' போன்ற இரு தரப்புக்கான இரு பிரிவு ஆசன ஏற்பாடு கொண்ட பிரித்தானிய பாராளுமன்ற அமைப்பு போல் அல்லாது ஐரோப்பிய பாராளுமன்றமானது உண்மையில் ஒரே வட்டவடிவ ஒழுங்கு முறையில் அவையின் அமர்வுகள் இடம்பெறும் நடைமுறையைக் கொண்ட ஒன்றாகும். ஆனாலும் ஜனவரி 8 இல் இருந்து இதுமட்டில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர் அணியின் குறுகிய மனப்பாங்கு நடத்தைகளால் மிகமோசமான சோதனைக் குள்ளாகியிருந்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நான்காவமுபதவியேற்பு நிகழ்வானது முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்கவினது அதே நடைமுறைகளை ஒத்தவிதமாகவே இருந்தது. அத்துடன் சேனநாயக்கவின் முதல் மூன்று பதவிக் காலமுங்கூட வெட்டிக்குறைக்கப்பட்டதுடன் அவர் தனது மட்டுப்படுத்தப்பட்ட நான்காவது பதவிக்காலத்தை மட்டுமே முழுமையாக நிறைவேற்றியிருந்தார்.

ஆனாலும் அவரது பதவிக்காலம் முடிவடைந்தது போலவேதான் இவரது விருப்பமும் இருக்கும் என்பதல்ல.

எப்படியும் சேனநாயக்கவைப் போல் ரணில் விக்கிரமசிங்க நடைமுறை அரசின் தலைவராகவோ அல்லது அமைச்சரவையின் தலைவராகவோ இல்லையென்பது குறிப்பிடத்தக்கவொரு வித்தியாசமேயாகும். அதன்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடமே அந்த தலைமைத்துவம் இருக்கிறதென்ற உண்மை அவருக்கு இயல்பற்ற சூழ்நிலையாக இருப்பினுங்கூட அதனை அனுசரித்துச் செல்லவேண்டியவராகவே பிரதமர் இருக்கிறார். முற்றுமுழுதான பெரும்பான்மைப்பலம் என்றில்லாவிடில் அவருடைய பணி கூடுதல் கடினமானதாகி விடும்.

தேசிய அரசாங்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் முனைப்பாக ஈடுபட்டிருக்கும் அதேநேரம் அவர் நிறைவேற்றவேண்டிய வாக்குறுதிகளும் ஏராளமாகவே இருக்கிறது. வெற்றியொன்று வரும்போது பெரும் நம்பிக்கைகளும் உயர் எதிர்பார்ப்புக்களும் தொடர்ந்து வருவதுடன் சில வேளைகளில் தவிர்க்க முடியாத ஏமாற்றங்களும் அதிருப்திகளுங்கூடவே விளைவாகலாம் என்பதுடன் மிக நன்றாகவே அவருக்குத் தெரிந்ததுதான். (1965-1970 இன் போது டட்லி சேனநாயக்க நிர்வாகமுங்கூட இவ்வித அனுபவங்களையே பெற்றிருக்கிறது)

ரணில் விக்கிரமசிங்க ஓர் புத்தகப்பூச்சி என்றளவிற்கு சேர் மிக்கேல் 'பார்பர் என்ற எழுத்தாளரது சாதனை நூலாகிய 'வரியிறுப்பாளர் பைத்தியமாகாமல் நாட்டு மக்கள் பயனடைய' என்ற நூல் அவரது கண்களுக்குத் தப்பியிருக்க முடியாது. பிரித்தானிய கல்விமானாகிய இந்த நூலாசிரியர் 50 இற்கு மேற்பட்ட நாடுகளில் அரச நிர்வாகம் மற்றும் பொதுச் சேவைகள் சீரமைப்பு பணிகளில் பெரும்பங்காற்றிய பெரும் அனுபவசாலியுமாவார். அவரது பொதுவான கருத்துப்படி "பிரச்சினைக்கான தீர்வென்பது வெறும் கருத்தியல் -சித்தாந்தங்களில் தங்கியதாக இல்லாது நீடித்து நிலைக்கும் முன்னுரிமை விடயங்களை கடின நிலைமைகளிலும் தளராது முன்னெடுத்துச் செல்வதிலேயே பெரிதும் தங்கியதாகயுள்ளது"

உலகம் முழுவதும் பரந்து காணப்படும் மில்லியன் கணக்கான மக்கள் தமது அரசுகள் மீது விரக்தி கொண்டவர்களாகவேயுள்ளனர். அரசியல் தலைவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராடிக் கொண்டிருக்கையில் பொறுப்புள்ள அதிகாரிகளோவென்றால் தமது நல்ல சிறந்த கருத்துக்களையுங்கூட நடைமுறைப்படுத்த முடியாது திணறிக் கொண்டிருக்கின்றனர். இதன் விளைவு அதிகரிக்கும் உயர்வரிகள், குறைந்த பயன்விளைவு மற்றும் வருமானக் குறைபாடு போன்றவையே. பொறுப்புள்ள அரசின் மீது காட்டப்படும் வெறுப்பு, நம்பிக்கையீனம் மற்றும் சந்தேகம் போன்றவை உண்மையில் அவர்களது பின்னணி அரசியல் வழிமுறைகளையே சுட்டிக்காட்டுவதாகவுள்ளது.

வெற்றிபெற்ற புதிய அரசு வெற்றிக்கனியாகிய அதன் பிரதிபலனை அனுபவிக்க வேண்டிய தகுதியைக் கொண்டிருக்கும் அதேநேரம் அதன் முன்னுள்ள பணிகளோ பெரும் சுமையாக குவிந்து கிடக்கின்றன. களத்தில் உடனிறங்கிப் பணியாற்றுவதே சிறப்பு- தீர்வுகளுக்கான ஒரே வழியும் அதுவே.

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள் கவனயீர்ப்புப் போராட்டம்

## இன்று யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக

(யாழ்ப்பாணம்)

**வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு விரைவில் அரசாங்க வேலைவாய்ப்பை வழங்கக் கோரிய கவனயீர்ப்பு போராட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தின் தலைவர் இ.பிரதாபன் அறிவித்தல் விடுத்துள்ளார்.**

இந்த போராட்டத்திற்கு வடமாகாணத்திலுள்ள வேலையில்லா உள்வாரி, வெளிவாரி, தேசிய உயர் தொழில்நுட்ப பட்டதாரிகள் அனைவரையும் குறித்த செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு அவர் அழைப்புவிடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச வேலைவாய்ப்பை வழங்கக் கோரிய கவனயீர்ப்பு ஆர்ப்பட்டம் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் பல தடவை முன்னெடுக்கப்பட்டு நாட்டின் ஜனாபதி, பிரதமர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அது தொடர்பில் இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில் இறுதியாக கடந்த சித்திரை மாதம் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தொடர்ச்சியாக இரவு பகலாக இரண்டு நாட்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் வடமாகாண வேலையற்றபட்டதாரிகளினால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வடமாகாண அமைச்சுக்களின் கீழ் வேலையற்ற பட்டதாரிகளை சேவையில் இணைத்துக்கொள்வதற்காக புதிதாக ஆளணி வெற்றிடங்கள் உருவாக்கப்படவுள்ளதாகவும் அதற்கு ஒரு மாதகால அவகாசம் தேவை எனவும் மேலும் குறித்த பிரச்சினை தொடர்பில் மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டுசென்று தீர்வு பெற்றுத்தருவதாகவும் வடமாகாண சபை அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து இரண்டு நாள் ஆர்ப்பாட்டம் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இதற்கமைய 1478 புதிய ஆளணி வெற்றிடங்கள் வடமாகாண அமைச்சரவையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான அனுமதியை பெற முகாமைத்துவ சேவைப் பிரிவுக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் மற்றும் வடமாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் விபரம் உத்தியோக பூர்வமாக வடமாகாண சபையில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் குறித்த வடமாகாண அமைச்சர்களினால் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த அரசாங்கத்தினால் தேசிய ரீதியில் 2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம்பெற்ற 5ஆயிரத்து 500 பட்டதாரிகளை அரசவேலைவாய்ப்பில் உள்ளீர்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதுவித வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறான நிலையில் புதிய அரசாங்கம் தற்போது ஆட்சி அமைத்துள்ளது. இந்நிலையில் தேசிய ரீதியில் காணப்படும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளை புதிய அரசாங்கம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் வடமாகாண அமைச்சரவையின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆளணி வெற்றிடத்திற்கான அனுமதியை உடனடியாக வழங்கி வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளை அரச வேலைவாய்ப்பில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே எமது போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## கற்றல் நடவடிக்கை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு. மத்திய கல்லூரியின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.எனவே கல்லூரியின் அனைத்து மாணவர்களையும் தவறாது கல்லூரிக்கு சமுகமளிக்குமாறுவடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ-5)

## இசைப்பேருரை

நல்லூர் கந்தன் ஆலய உற்சவ காலத்தையொட்டிநல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் கந்த புராண தொடர் இசைப் பேருரை தினமும் 6.45 மணிக்கு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக்குரு மணியின் பிரதமவாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவினால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்று திங்கட்கிழமை திருப்பெருவடிவம் எனும் கந்தபுராணத்தொடர் இசைப் பேருரை இடம்பெறும். (இ-5)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாண சின்மயாமிஷன் நடத்தும் இந்து வாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமியினால் வழங்கப்பட்டு வருகின்ற ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணி தொடக்கம் 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை கடமையை செய் பலனை எதிர்பாராதே எனும் ஆன்மீக அருளுரை இடம்பெறும். (இ-5)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர்க்கந்த சுவாமி ஆலய உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வருகின்ற தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிகழ்வில் பாடல்- திருமதி தாரணி ராஜ்குமார், வயலின்- பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம்- எஸ்.கமலதாஸ், கெஞ்சிரா- ப.சியாம்கிருஷ்ணா ஆகியோர் வழங்கும் இசையரங்கு இடம்பெறவுள்ளது. (இ-5)




## கைலை மலை ஏறும் காட்சி காண வாரீர்

கைலை நாதனின் புதல்வா
இராவணன் இசை மீட்டிட்ட
கைலாய மலை தனை காண வாரீர்
கஜவல்லி, மகாவல்லி சமேதரராய்
உன் அருள் காட்சி காண வாரீர்
எம் நல்லைக் குமரன் கைலை மலை
ஏறும் அழகுக் காட்சி காண வாரீர்
எம் சுந்தர வடிவழகனின் அருள்
காட்சி காண வாரீர்
வரம் பல பெற ஓடோடி வாரீர்
கேட்ட வரம் தந்திடுவான் எம் குமரன்.

வ.பவளகேசி
கொய்யாத் தோட்டம்.

## தீவினையை போக்குகிறான்

அழகு முருகனுக்கு ஆயிரம் அலங்காரம்
மயில் வாகனத்தில் மகிழ்வுடனே
பறக்கின்றான்
ஆட்டுக் கடா தனிலே ஆடி ஆடி வருகிறான்
கைலாச வாகனத்தில்
கைலாயக் காட்சிதந்தான்

இராசு.மங்களேஸ்வரி
வட்டுக்கோட்டை

## அருள் தந்திடுவாய் குமரா!

நல்லை நகருறைந்த குமரா
தொல்லை வினை தீர்க்கும் கடம்பா
எல்லையில்லாஇன்பம் தரும் முருகா
வல்ல அருள் தந்திடுவாய்
கற்றமிழ் காவலனே
ஏற்றம் தர வந்திடுவாய்
மாங்கனி வேண்டி உலகளந்தவனே
மாயமாய் நாவற்கனியில் தமிழானவனே
அசுரரை வதம் செய்தவனே
அவனி சிறந்திட அருள் தந்திடுவாய்

உடுவிலூர் கலா

## நல்லைக் கந்தன் நனிவிருத்தம்

வஞ்சகம் சூது வாது
வளர்பிறை யாகுங் காலம்
துஞ்சிடும் நிலைநீ கொள்ளும்
சூட்சுமம் தெரியா தையா
அஞ்சிடும் நிலையை நீக்கி
அநீதிக ளனைத்தும் போக்கி
விஞ்சிடும் நீதி நேர்மை
விளைந்திடு நல்லைக் கந்தா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்

கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர
சாரதி பயிற்சி பாடசாலை
இல. 226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 4353, 077 722 5292
சாவகச்சேரி: 021 492 3202, 021 227 0700

# எக்னெலிகொட கடத்தல் சம்பவம் குறித்த வழக்கு கைவிடப்படுமா?

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதில் பல்வேறு முட்டுக்கட்டைகள் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

தற்போதைக்கு பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தல் மற்றும் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

எனினும் இது தொடர்பான தகவல்கள் மற்றும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டிய தரப்பினர் இழுத்தடிப்பு மற்றும் முட்டுக்கட்டை போடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தற்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் தடுப்புக்காவல் காலம் சில நாட்களில் முடிவடைய உள்ளது. எனினும் அவர்களை குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் அளவில் தடுப்புக் காவல் விசாரணைக்கு உட்படுத்தினால் மாத்திரமே தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று புலனாய்வுப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையே தற்போதைய தேசிய அரசாங்கத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள ஒரு சிலரும் இந்த விசாரணைகளை தடுக்கும் நோக்கில் செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

இவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பின் ஆதரவாளர்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சம்பவம் தொடர்பலான வழக்கு கைவிடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் எல்லையில் இந்தியா அத்துமீறி தாக்குதல் நடத்துகிறது

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் பாக்.பிரதிநிதி குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

**காஷ்மீர் எல்லையில் இந்தியா அத்துமீறி தாக்குதல் நடத்துகிறது. இந்த தாக்குதல்களில் கடந்த மாதம் மட்டும் 20 பேர் பலியாகியுள்ளனர் என ஐ.நா பாதுகாப்புச் சபையில் பாகிஸ்தான் பிரதிநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.**



காஷ்மீரில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவமும் இந்திய இராணுவமும் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றன. இவவாறு இருதரப்பு இராணுவ வீரர்களும் பதிலடி கொடு த்து வருகின்றனர். இந்த தாக்குதல்களில் இரு புறமும் அடிக்கடி உயிர்ச்சேதம் ஏற்பட்டு வருகின்றன.

இந்த விவகாரத்தை ஐ.நாவுக்கான பாகிஸ்தான் பிரதிநிதி மலீகா லோதி, நேற்று முன்தினம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் எழுப்பினார். அவர் மேலும் கூறுகையில்,

காஷ்மீர் எல்லையில் இந்தியா அத்துமீறி தாக்குதல் நடத்துவதாகவும், இவ்வாறு நடந்த தாக்குதலில் கடந்த மாதம் மட்டும் 20 பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டதாகவும், 97 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

கடந்த ஜுலையில் 36 முறை போர் நிறுத்த ஒப்பந்தத்தை இந்தியா மீறியதாக கூறிய அவர், அங்கு போர் நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.


மேலும் இந்த தாக்குதல் தொடர்பாக இந்தியா, பாகிஸ்தானுக்கான ஐ.நா.வின் இராணுவ பார்வையாளர்கள் விசாரணை நடத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுததுள்ளார்.

இதேவேளை இந்தியாவும் பாகிஸ்தானும் தமது பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூன் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (3-7)

# அசாமில் வெள்ள அனர்த்தம் 50 பேர் உயிரிழப்பு







(டில்லி)

அசாம் மாநிலத்தில் பெய்து வரும கனமழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி, பலியானோர் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது. அசாமில் பெய்த கனமழை காரணமாக 16 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2.26 இலட்சம் பேர் பேரிடர் நிவாரண முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

பிரம்மபுத்திரா ஆறு கரை புரண்டு ஓடுவதால் 6 மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பெருவெள்ளத்தினால் 2000 கிராமங்கள் முற்றிலுமாக நீர் சூழ்ந்து காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக அசாம் அரசு 300க்கும் மேற்பட்ட நிவாரண முகாம்களை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் திறந்துள்ளது.

பார்பேட்டா மாவட்டத்தில் உள்ள நகுச்சிபதர் கிராமம் பெருவெள்ளத்தில் சிக்கி முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் மீன்பிடித்தலை முக்கிய தொழிலாக கொண்ட அசாமின் கிராமப்புறங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதி மக்கள் தண்ணீரால் பரவும் நோயாலும் தாக்கப்பட்டுள்ளனர். (3-7)

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி வாழ்த்து

(சென்னை)

இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சம்பந்தனுக்கு கருணாநிதி வாழ்த்து தெரிவித்துள்ளார். தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் கடந்த ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில், சம்பந்தன் தலைமையிலான தமிழ்ர் தேசிய கூட்டமைப்பு 16 உறுப்பினர்களை பெற்று, பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இடம் வகித்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அனைத்துக் கட்சிகளும் முக்கயமான பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்த தேசிய அரசு அங்கே அமைக்க இரண்டு கட்சிகளுமே ஒப்புக்கொண்டன.

அதன் காரணமாக அங்கே 2-வது பெரிய கட்சி, எதிர்க்கட்சியாக அங்கே அமரவில்லை. இந்த நிலையில் பாராளுமன்றத்தில் 3-வது கட்சியான தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கப்பெற்று இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

38 ஆண்டுகளுக்கு முன்பு 1977ம் ஆண்டு எனது நண்பர், தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவராக இருந்த நாவலர் அமிர்தலிங்கத்திற்கு பிறகு, தமிழர் ஒருவர் இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சித்தலைவராக ஆகியுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

இலங்கை தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வில் விடிவு காலம் ஏற்படாதா? என்று நீண்ட நாட்களாக எதிர்நோக்கியிருக்கும் வேளையில், எதிர்க்கட்சித்தலைவராக சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையை தருகிறது.

சம்பந்தனுக்கும், இலங்கை தமிழர்களுக்கு உரிய நீதி கிடைக்கவும், அவர்களுக்கு அதிகாரம் கிடைக்கவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாடுபடும் என்று கூறியருப்பதும் மகிழ்ச்சியை தருகிறது. சம்பந்தனுக்கு தி.மு.க. சார்பில் இதயமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு கருணாநிதி தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். (3-7)



முன்னாள் ஜனாதிபதி ராதா கிருஷ்ணன் பிறந்த நாளான நேற்று தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறை சார்பில் ஆசிரியர் தினவிழாவாக கொண்டாடப்பட்டது. தமிழகத்தில் 379 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது சென்னையில் நடந்த ஆசிரியர் தின விழாவில் வழங்கப்பட்டது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உள்ளம் தூய்மையாக இருந்தால் பேச்சுத் தெளிவாக இருக்கும். நீ நேர்மையானவனாகவும் இருப்பாய். -கி.ஆ.பெ விசுவநாதம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நீ எப்போது மைத்திரியானாய்? ஜனாதிபதியிடமே கேட்டார் ரஞ்சன்

## தொலைபேசி அழைப்பில் நடந்த சுவாரசியம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஜனாதிபதியிடமிருந்து வந்த தொலைபேசி அழைப்புக்கு கேலியாக பதிலளித்து அசடுவழிந்த சம்பவமொன்று கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, தேவையொன்றின் நிமித்தம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி கூட்டமொன்றில் கலந்து கொண்டிருக்கும் காரணத்தினால், சற்று நேரம் கழித்து ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி அழைப்பு குறித்த தகவலை ஜனாதிபதியிடம் கூறுவதாக அவரது பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

எனினும் அன்று மாலை வரை காத்திருந்த ரஞ்சன், ஜனாதிபதியின் அழைப்பு வராத நிலையில் உடல்களைப்பினால் நேர காலத்துடன் தூங்கச் சென்றுள்ளார். இந்நிலையில் நள்ளிரவு தாண்டிய போது பிரைவேட் நம்பர் என்று மின்னிட்ட தொலைபேசி அழைப்பொன்று அவருக்கு வந்துள்ளது.

பெரும்பாலும் வெளிநாடுகளில் இருக்கும் ரஞ்சனின் நண்பர்களின் அழைப்பு வரும்போதும் அவ்வாறு பிரைவேட் நம்பர் என்று பளிச்சிடுவதால் அதுவும் அவ்வாறான தொலைபேசி அழைப்பாக இருக்கலாம் என்று முதல் தடவை அழைப்பை புறக்கணித்துள்ளார்.

இரண்டாவது தடவையாகவும் தொலைபேசி அழைத்த நிலையில் ரஞ்சன் பதிலளிக்க, ஹலோ, அமைசசரே, நான் மைத்திரிபால பேசுகிறேன் என்ற குரல் செவிகளில் ஒலித்துள்ளது. நண்பர்கள் தான் கிண்டல் செய்வதாக நினைத்த ரஞ்சன், நீ எப்போது இருந்து மைத்திரிபால சிறிசேனவாக மாறினாய்? என்று ரஞ்சன் வினவியுள்ளார்.

மீண்டும் ஜனாதிபதி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோதும் ரஞ்சன் அதே பதிலையே கிண்டலுடன் அளித்துள்ளார். அத்துடன் தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டது.

எனினும் தனக்கு வந்த அழைப்பு ஜனாதிபதியிடமிருந்து வந்த அழைப்பாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் அவர் மீண்டும் ஜனாதிபதியை தொடர்பு கொண்டுள்ளார். அதன்போது சற்று முன்னர் வந்த அழைப்பு உண்மையில ஜனாதிபதியிடமிருந்து வந்த அழைப்புத் தான் என்பது தெளிவாகியுள்ளது.

அதனையடுத்து ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியிடம் நடந்ததைக் கூறி மன்னிப்புக் கோரியுள்ளார்.

அதற்கு பலமாக சிரித்த ஜனாதிபதி, நல்லவேளை நான் துண்டித்துவிட்டேன். இல்லாவிட்டால் கெட்ட வார்த்தைகள்தான் நான் கேட்டிருக்க நேரிடும் என்று சிரித்துள்ளார்.

அத்துடன் தான் தொடர்ச்சியாக கூட்டங்களில் உரையாற்ற நேர்ந்துள்ளதால், தனது குரல் மாறிப் போயிருப்பதன் காரணமாக ரஞ்சனுக்கு தன்னுடைய குரலை இனம் காண முடியாது போயிருக்கலாம் என்று கூறி அவரை ஆசுவாசப்படுத்தவும் செய்துள்ளார். (செ-12)

## மாவையின் உரை அநாகரிகமானது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா வவுனியாவில் ஆற்றிய உரை அநாகரிகமானதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

வடக்கின் முதலமைச்சரை குறை கூறுவதாக மாவை சேனாதிராசாவின் உரை அமைந்திருப்பது தமிழ் மக்களிடம் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபைத் தேர்தலின் போது வடக்கில் போட்டியிட விரும்பிய மாவை சேனாதிராசாவுக்கு அந்த இடம் வழங்கப்படாததில் இருந்து அவர் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது பகை கொண்டார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போதும் விக்னேஸ்வரன் மீதான தனது எதிர்ப்பை மாவை சேனாதிராசா வெளிப்படையாகக் காட்டி நின்றார்.

இது தவிர, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கின் முதல்வருடன் சந்திக்கவும் கதைக்கவும் மறுத்த போது, மாவை சேனாதிராசா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஓடிச் சென்று சந்தித்தார். இவை எல்லாம் விக்னேஸ்வரன் மீது கொண்ட பகை காரணமாக மாவை சேனாதிராசா செய்தவை என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

இந்நிலையில், வடக்கின் முதல்வருக்கு எதிராக சில வால்பிடிகளும் குரல் கொடுக்கத் தலைப்பட்டமை கண்டிக்கத்தக்கது. இத்தகையவர்கள் செய்த மோசடிகள் குறித்து ஊடகங்கள் குரல் கொடுப்பது அவசியம். அதேநேரம் வடக்கில் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்த் தலைமையை பொறுப்பேற்க வேண்டும். இதற்காகவே அவரை கடவுள் வடக்கு மாகாணத்துக்கு அனுப்பியுள்ளார்.

தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என்று தந்தை செல்வநாயகம் கூறியபோது நாம் எல்லோரும் சிங்களவர்களிடம் இருந்து காப்பாற்றுவதையே தந்தை செல்வநாயகம் சொல்வதாக நினைத்தோம். ஆனால் இப்போதுதான் புரிகிறது, தமிழர்களை தமிழ் அரசியல் தலைமையிடம் இருந்து காப்பாற்றுவதையும் உள்ளடக்கியே தந்தை செல்வநாயகம் கூறினார் என்று.

எதுவாயினும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்ல முடியும்.

தாங்கள் வடக்கின் முதலமைச்சராக அதிகூடிய விருப்பு வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதை ஒட்டி தங்களுக்கு சிறப்பான முறையில் பாராட்டுவிழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது.

அதன்போது வேலாயுதம் ஒன்று தங்கள் கையில் தரப்பட்டமை ஞாபகம் இருக்கும் என்று நினைக்கின்றோம்.

இந்த வேல் தங்கள் கையில் தரப்பட்டதன் நோக்கம் சூரர்களை அழித்தால் அன்றி, தமிழர்களுக்கு உரிமையும் 'கிடையாது; நீதியும் கிடையாது என்பதாகும். எனவே விக்னேஸ்வரா! கையில் தரப்பட்ட வேலாயுதத்தை எறிந்து சூரரை அடக்கு. அந்த முருகப் பெருமான் சூரனை மடக்கியதுபோல, நீங்களும் தமிழர்களுக்கு எதிராக இருக்கக் கூடிய அரசியல் சூரர்களை அடக்க வேண்டும். அதற்கான வியூகத்தை அமையுங்கள்.

தமிழர்களுக்கு நேர்மையான-விசுவாசமான ஒரு தலைமை உருவாக தாங்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பமாகும்.

## போலிக் கடவுச்சீட்டு குற்றச்சாட்டு; நாடு கடத்தப்பட்ட 6 பேர் கைது

போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி பல நாடுகளுக்கு செல்ல முயற்சித்த சிரிய பிரஜை உட்பட இலங்கையர்கள் ஐவர் நாடுகடத்தப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாடுகடத்தப்பட்ட இலங்கையர்கள் ஐவர் உட்பட வெளிநாட்டு பிரஜையும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததன் பின்னர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மந்தாரபுரம், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் பிரான்ஸ், கிறஸ், இத்தாலி மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கு செல்வதற்கு முயற்சித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் இருவர், பிரான்ஸ் நோக்கி பயணிக்க முயற்சித்துள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்தவர் கிறிஸ் நோக்கியும் மன்னாரை சேர்ந்தவர் அபுதாபியூடாக இத்தாலி நோக்கி பயணிக்க முயற்சித்துள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்தவர் ஜேர்மனுக்கு பயணிக்க முயற்சித்துள்ளார். கைது செய்யப்பட்ட சிரிய நாட்டுப் பிரஜை போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி பிரித்தானியாவிற்கு செல்ல முயற்சித்துள்ளார். கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர்கள் ஐவரையும் வெளிநாட்டு பிரஜையையும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். (செ-12)

**சின்மயா மிஷன்**

**நல்லூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வலம்புரி பத்திரிகையின் இணை அனுசரணையுடன் இணைந்து நடத்தும் இந்துவாக வாழ்வோம் வினாவிடைப்போட்டி**

வினா: 12) a) இன்றைய சிறார்களில் வளர்த்தெடுக்கப்படவேண்டிய சிறந்த ஆளுமை விருத்திப் பண்புகளாக குறிப்பிட்டவற்றுள் ஐந்தினைத் தருக?

நேர்மனப்பாங்கு, கடமை உணர்வு, தூரநோக்கு, விமர்சனங்களை எதிர்கொள்ளல், படைப்பாக்கத்திறன், சட்டங்களை மதித்து நடத்தல்., மற்றவர்களின் கருத்திற்கு மதிப்பளித்தல், இலட்சியத்தைக் கொண்டிருத்தல், ஆற்றலுள்ள மனித விழுமியங்களுடன் கூடிய சிறந்த தலைமைத்துவம், சூழலை நேசித்தல்

b) வாழ்க்கை எனும் விளையாட்டு என்பதன் ஊடாக நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?

**வினாக்களுக்கான விடைகளை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்துவாக வாழ்வோம் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.**

## எரிபொருள்விலை குறைவடைய வாய்ப்பு

எதிர்வரும் நாட்களில் எரிபொருள் விலை மீண்டும் குறைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வாயு அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் மத வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை இதுவரையில் 50 அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளது.

கடந்த 11 வருடங்களின் பின்னர் மசகு எண்ணெய் விலை இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## திருவிளையாடல்



இயக்க மண்டலத்திலுள்ள எல்லாவற்றையும் சூழ்ந்த முத்திக் கொண்டிருக்கும் தூய இறைவெளிதான் இருப்பு மண்டலம். தூய வெளியெனும் பிரம்ம நிலை தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் பேராற்றலால், எந்த ஒன்றையும், மற்ற ஒன்றிலிருந்து பிரிந்து போகாமல், சூழ்ந்தழுத்திக் கொண்டிருக்கின்றது. ஆயினும், ஒவ்வொரு வேதான் நுண்ணணுவும் தனது தற்சுழற்சி விரைவாலும், யோகான் எனும் நுண்ணணுவின் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் காந்த தன்மாற்ற அலைகளாலும், நுண் விண்களிடையே குறிப்பிட்ட அளவில் தொலைவு அமைந்திருக்கின்றது. அது காக்கவும் படுகின்றது.

எனவே, நுண்ணணுவானாலும் சரி, அண்டங்கள் ஆயினும் சரி, அவற்றில் எழுந்து இயங்கும் அலையின் அழுத்தத்திற்கு மேலாக எதுவும் விலகிப் போகாமல் காப்பது சூழ்ந்தழுத்தம் அனைத்தியக்க அருட் பேராற்றலே. அதே போன்று எந்த நுண்ணணுவோ, அண்டங்களோ - அவற்றிலிருந்து வெளியாகும் அலைகளின் தள்ளும் ஆற்றலுக்கு மேல் விலகவும் முடியாது. இந்த நியதி தான் வான்காந்த ஆற்றலின் விளைவு.

மேலும், நுண்ணணுக்களாகிய வேதான்கள் இடையிலும், கோள்களின் இடையிலும், கோள்களின் உட்புறம் உள்ள இறைவெளியிலும் கணக்கிட முடியாத அளவில் யோகான் நுண்ணணுக்கள் தோன்றிக் கொண்டேயும், அவை தன்மாற்றங்களை அடைந்து கொண்டேயும் இருக்கும் விந்தைகளே வான்காந்தம் எனும் மறைபொருள் பேரியக்க மண்டலத்தில் ஆற்றும் திருவிளையாடல்கள். இயற்கையின் இயல்பாக நடைபெறும் தெய்வீக நிகழ்ச்சிகளைத் திருவிளையாடல் என்று வழங்குகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் சம்பியன்




புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக சம்பியனாகியது.

இச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் இரணைப்பாலை சென். அன்ரனீஸ்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிலாவத்தை இளம் பறவைகள் அணி மோதியது.

அபாரமாக விளையாடிய இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக வீரர் அநோயன் 04 கோல்களை போட்டு அசத்தினார்.

இறுதியில் சிலாவத்தை இளம் பறவைகள் அணியினை 4:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சம்பியனாகியது.

இரணைப்பாலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் தொடர்ந்து முழுவதுமாக சேர்ந்து 7 கோலினை போட்ட அநோயன் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் தெரிவானார்.

சிறந்த கோல் காப்பாளராக ஆனோயிதன் தெரிவாகினார்.

இவ் இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்ற சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கான வெற்றிக் கிண்ணத்தினையும் நினைவுப்பரிசில்களையும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வைத்திய அதிகாரி சத்தியரூபன், புதுக்குடியிருப்பு பங்குத்தந்தை ஆகியோர் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)







## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குச

உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தினால் வருடம் தோறும் நடத்தும் கிரிக்கெட் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சிக்கு உட்பட்ட கழகங்களுக்கான லீக் போட்டிகள் மற்றும் யாழ். மாவட்ட ரீதியான 5,10 ஓவர் கள் கொண்ட போட்டிகள் நடை பெறவுள்ளன.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077 220 8185, 077 966 9233, 077 8217853 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வெற்றி பெறும் அணிக்கு பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளது. போட்டிக்கான உத்தியோக பூர்வமானதிகதிபின்னர்அறிவிக்கப்படும். (கு)

# யோகச்சந்திரன் அதிரடி ஆட்டம் சுப்பர் 8க்கு ஆதிசக்தி தகுதி







நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடந்த போட்டியில் ஆதிசக்தி வி.க. எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.க மோதியது. இரண்டுஉள்ளூர்அணிகளாககாணப் பட்டமையினால்ரசிகர்களின் பலத்துடன் இருஅணிகளும்விறுவிறுப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தின.

போட்டியின் 22 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி வீரர் யோகச்சந்திரன் ஒரு கோலினை அடித்தன் மூலம் 1.0 என ஆதிசக்தி முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணிக்கு கிடைத்த மூலை உதையினை கச்சிதமாக பயன்படுத்திய பார்த்தீபன் தலையால் முட்டி ஒரு கோலினை அடிக்க மீண்டும் ஆட்டம் 1:1 என சமநிலையானது.

வெற்றிபெற ஒரு கோலினை பெறவேண்டும் என இரு அணிகளும் முயற்சித்த போது 23 ஆவது நிமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான பந்து பரிமாற்றத்தினை வாயப்பாக பயன்படுத்திய ஆதிசக்தி வீரர் யோகச்சந்திரன் மேலும் ஒரு கோலினை அடித்து அசத்தினார். ஆட்ட நேர முடிவில் ஆதிசக்தி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டியின் போது 2 கோல்களை அடித்து அணியை வெற்றிப் பாதைக்கு வழி நடத்திய யோகச்சந்திரன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டு கலைவாணி சன சமூக நிலையத்தின் தலைவர். வே.கஜேந்திரன் பதக்கம் அணிவிக்க யங்கம்பன்ஸ் மூத்த உறுப்பினர் வை.இரட்ணம் அணிக்கான பணப்பரிசினை வழங்கி கௌரவித்தார். (கு)



# நெடியகாடு மென்பந்தாட்டம் 2ம் சுற்றில் வல்வை வி.கழகம்



வல்வெட்டித்துறைநெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 10 பந்து பரிமாற்றம் கொண்ட மென்பந்தாட்ட சுற்று தொடரின் முதல் சுற்று போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டு கழகத்தை எதிர்த்தாடிய வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டு கழகம் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்துடனான ஒரு நாள் தொடர்

# ஸ்ரோக்கின் சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்பின் பின் 2-வது போட்டியிலும் அவுஸ்திரேலியா வெற்றி

இங்கிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 64 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணியின் இவ் வெற்றிக்கு ஸ்ரீபன் ஸ்மித், ஜோர்ஜ் பெய்லி, மிட்சல் மார்ஷ் ஆகியோரின் அரைச் சதங்கள் காரணமாகின.

லண்டன் லோட்சில் நடைபெற்ற இப்போட்டியின் ஆரம்பத்தில் மழை குறுக்கீடு செய்தமையால் போட்டி 49 ஓவர்களைக் கொண்டமைந்ததாக மாற்றியமைக்கப்பட்டது.

வானம் மேகமூட்டமாக காணப்பட்டமையால் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஒய்ன் மோர்கன், அவுஸ்திரேலிய அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர், பேர்ன்ஸ் ஆரம்பம் கொடுத்தனர்.

அவுஸ்திரேலிய அணி 2 ஓட்டங்களை எடுத்திருக்கும் போது அதிரடி வீரர் வோர்னர் ஒரு ஓட்டத்துடன் பின்னின் பந்தில் காயமடைந்து அரங்கு திரும்பினர்.

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை நடுத்தர ஓவர்களில் ஸ்மித், பெய்லி, மக்ஸ்வெல் துடுப்பாட்டமும் இறுதிக் கட்ட ஓவர்களில் வோட்சன், மார்ஷ் காட்டிய அதிரடியும் கலக்க,

50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 309 ஓட்டங்களை எடுத்தது.

இவ்ஓட்ட எண்ணிக்கையானது அவுஸ்திரேலிய அணி லோட்ஸ் மைதானத்தில் பதிவு செய்த 4 ஆவது அதிகூடிய ஓட்டங்களானது.

துடுப்பாட்டத்தில் ஸ்மித் 70, மார்ஷ் 64, பெய்லி 54, மக்ஸ்வெல் 49 ஓட்டங்களை எடுத்தனர்.

310 என்ற கடினமான வெற்றியிலக்கை நோக்கி இங்கிலாந்து அணி களமிறங்கியது.

இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரை 300+ ஓட்டங்களை அவர்கள் மூன்று சந்தர்ப்பங்களில் மாத்திரமே பதிலெடுத்துள்ளனர்.

இவ்வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணியால் 42.3 ஓவர்கள் வரையே தாக்குப்பிடித்து ஆடி 245 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் மோர்கன் இறுதிவரை போராடி 85 (87 பந். 4 பவுண்., 4 சிக்ஸ்) ஓட்டங்களை எடுத்து இறுதிவீரராக வெளியேற இங்கிலாந்து தோல்வியை பதிவு செய்தது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் கம்மின்ஸ் 56 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மார்ஷ் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி நாளை மான்செஸ்டரில் ஆரம்பமாகிறது.

*சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்பு*

இங்கிலாந்து துடுப்பாட்டத்தின் போது 26ஆவது ஓவரை ஸ்ரார்க் வீசினார். அவரின் பந்தை எதிர்கொண்ட ஸ்ரோக்ஸ் அவரிடமே டிரைவ் செய்து ஓரிரு அடிகள் ஓட்டத்துக்காக கிரீஸை தாண்டி வெளியே வந்தார், அவ்வேளை பந்தை தடுத்த ஸ்ரார்க் நேராக ஸ்டம்பை நோக்கி எறிந்தார்.

இச்சமயம் எதிர்முனையில் நின்ற ஸ்ரோக்ஸ் அதனை தனது இடது கையால் தடுத்தார், தனக்கு அடிபட்டு விடக்கூடாது என்ற காரணத்தினால் அப்படி செய்தாரா?, அல்லது ரன்-அவுட் பயத்தில் செய்தாரா? என்பதெல்லாம் எளிதில் விளங்காத விஷயம். ஸ்ரோர்க்கின் இச்செயலை எதிர்த்து அவுஸ்திரேலிய வீரர்கள் கடும் முறையீடு எழுப்ப கள நடுவர்கள் அதனை ஏற்கவில்லை, ஆனால் 3ஆவது நடுவர் ஜோ வில்சன், பந்தை ஸ்ரோக்ஸ் வேண்டுமென்றே தடுத்து இடையூறு செய்ததாகக் கணித்து ஆட்டமிழப்பு வழங்கினார்.


ஸ்ரோர்க்கின் சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்பு

இது இரு அணித் தலைவர்களிடையும் வார்த்தைப் பரி மாற்றங்களுக்கு வித்திட்டது.

கிரிக்கெட்டில் 7ஆவது பேட்ஸ்மெனாக ஸ்டோக்ஸ் இம்முறையில் ஆட்டமிழந்தார்.

# மரண அறிவித்தல்

இசைஞானதிலகம்

## உருத்திராபதி இராதாகிருஷ்ணன்

(வயலின் வித்துவான்)



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உ.இராதாகிருஷ்ணன் அவர்கள் 06.09.2015 நேற்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

தகவல்:குடும்பத்தினர்.
மஞ்சத்தடி, இணுவில்.
021 224 1549

(1699)

## காணாமல் போனோர்...

மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐநாவின் விசாரணை அறிக்கை வெளியிடப்படவுள்ள சந்தர்ப்பத்தில், அடுத்து நடத்தப்பட வேண்டியது உள்நாட்டு விசாரணையா அல்லது சர்வதேச விசாரணையா என்ற சர்ச்சைகள் எழுந்துள்ள பின்னணியில் இந்த அறிக்கை தொகுக்கப்பட்டிருக்கிறது.

பொலிஸார், இராணுவத்தினர், துணை ஆயுதக் குழுக்கள் போன்றவர்களாலும் வெள்ளை வான்களில வந்தவர்களாலும் பகிரங்கமாக காணாமல்போகச் செய்யப்பட்டவர்கள், யுத்தத்தின் இறுதி நாட்களில் அரசாங்கத்தின் உத்தரவாதத்தை ஏற்று இராணுவத்தினரிடம் சரணடைந்ததன் பின்னர் காணாமல் போயிருப்பவர்கள், மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி விவகாரம் என்று மூன்று பிரிவுகளாக இந்த அறிக்கை தொகுக்கப்பட்டிருப்பதாக சி.எச்.ஆர்.டி அமைப்பைச் சேர்ந்த வழக்கறிஞர் கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

காணாமல்போனவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்திய ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளில் காணப்படுகின்ற குறைபாடுகள், சீரற்ற நடைமுறைகள் என்பன குறித்தும் மக்கள் இந்த உள்ளக விசாரணைகளில் நம்பிக்கை இழந்திருப்பதற்கான காரணங்கள் பற்றியும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில், காணமல் போனவர்களின் சடலங்களும் இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகவும், அதனால் அது தொடர்பான வழக்கு விசாரணைகள் பற்றியும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக வழக்கறிஞர் ரட்ணவேல தெரிவித்தார்.

மேலும் சி.எச்.ஆர்.டியினர் ஐ.நா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்களிடமும் மேற்படி விடயத்தை எடுத்துக் கூறியுள்ளதால் வெளிவரவுள்ள ஐநா மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கை, பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான உணர்வுகளை உள்வாங்கி சரியான முடிவுகளை மேற்கொள்வதற்குப் பேருதவியாக அமையும் என்றும் ரட்னவேல் நம்பிக்கை வெளியிட்டுள்ளார. (செ-12)

## ஐ.நா பொதுச்...

உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வாடகை வாகனங்களுக்கான கட்டண மதிப்பீடு தொடர்பிலான அறிவித்தல் விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் அலுவலகத்துக்கு தேவையான சொகுசு கார்கள், வான்கள் மற்றும் சிறிய பேருந்துகளின் எண்ணிக்கைகள், இருக்கைகள் குறித்த தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறித்த அறிவித்தல் விளம்பரத்தின் தகவல்களுக்கு அமைய 100க்கும் மேற்பட்டோர் பயணிக்கக் கூடிய வகையில் வாகனங்கள் தேவைப்படுவதாகவே அறிய முடிகிறது.

மேலும் அனைத்து வாகனங்களும் 2012ஆம் ஆண்டுக்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்டதாக இருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாகன சாரதிகள் ஆங்கில அறிவுடையவர்களாகவும் நியுயோர்க் நகர் பற்றி தெரிந்தவர்களாகவும், சாரதிகளுக்கான சீருடையுடன் இருக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த அரசாங்கத்தைப்போல் புதிய அரசாங்கமும் மிகப் பெரிய பிரதிநிதிகள் குழு ஒன்றை பொதுச்சபை அமர்வில் பங்கேற்கச் செய்யவுள்ளதா? என கொழும்பு அரசியல் மட்டத்தில் கேள்வி எழுந்துள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஐ.நா பொதுச் சபை கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தனது பரிவாரங்களுடன் கலந்துகொண்டதுடன், அதற்கென அரசாங்கம் பாரிய நிதியை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஜெனிவா பயணி...

இந்தக் குழுவில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன், டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் தானும் ஜெனிவா செல்லவுள்ளதாகக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஏனைய தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஜெனிவா செல்லக் கூடும் என்றும் தெரிவித்தார்.

ஐநா மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கை வெளியானதும், அடுத்த கட்டமாக அது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அதன் ஊடாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதுடன், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு வழிபிறக்கும் என்பதே தங்களுடைய நிலைப்பாடு என்றும் சிவாஜிலிங்கம் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலேயே தான் ஜெனிவாவுக்குச் செல்வதாகக் கூறிய சிவாஜிலிங்கம், இதுகுறித்து கூட்டமைப்பு மட்டத்தில் கூடிப் பேச்சு நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

வழமையாக இத்தகைய சந்தர்ப்பங்களில் தமது கட்சியின் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் ஆகியோரிடம் தெரிவித்துவிட்டே தான் ஜெனிவா சென்று வந்துள்ளதாகவும், இம்முறையும் அவ்வாறே செல்லவுள்ளதாகவும் சிவாஜிலிங்கம் கூறினார். (செ-12)

## ஜனாதிபதித்...

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் முடியும் இறுதி தினமான ஜனவரி 5ஆம் திகதி நான் எம்பிலிப்பிட்டிய, களுத்துறை, மொரட்டுவ உள்ளிட்ட இடங்களில் பல கூட்டங்களில் கலந்து கொண்டு விட்டு, வீட்டுக்கு வந்தேன். அன்றைய தினம் நான் கலந்து கொள்ளும் இறுதியான கூட்டம் மருதானையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஏனைய அனைத்துக் கூட்டங்களிலும் உரை நிகழ்த்தி விட்டு வீட்டுக்கு வந்த என்னை பாதுகாப்பு காரணங்களுக்காக மருதானை கூட்டத்துக்கு அழைத்துச் செல்ல முடியாது என்பதால், பாதுகாவலர்களும், சாரதியும் என்னை வீட்டில் தனிமையில் விட்டுச் சென்றனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் ரணில் விக்ரமசிங்க என்னை தொடர்பு கொண்டு மருதானை கூட்டத்துக்கு நீங்கள் வரும் வரை நாங்கள் காத்திருக்கின்றோம் என்று கூறினார்.

அப்போது பாதுகாவலர்களும், சாரதியும் இல்லை என்பதால், என்னால், மருதானைக்கு வர முடியாத நிலைமை இருப்பதாக கூறினேன்.

அப்போது எவரும் தேவையில்லை நான் வந்து உங்களை அழைத்துச் செல்கிறேன் எனக் கூறிய பிரதமர், சில நிமிடங்களில் வீட்டுக்கு வந்தார். பிரதமருடன் ரவி கருணாநாயக்கவும் வந்திருந்தார்.

இதனையடுத்து நாங்கள் அனைவரும் மருதானை கூட்டத்துக்கு சென்றோம். மேடைக்கு அழைத்துச் சென்ற ரணில் விக்கிரமசிங்க, ஆயிரக்கணக்கான மக்கள் நடுவில சென்று கைகளை தூக்கி பதில் வழங்கினார்.

எமது கூட்டங்களில் உங்களது உயிருக்கு ஆபத்தில்லை என்பதை உணர்த்தவே ரணில் விக்கிரமசிங்க மக்கள் மத்தியில் சென்று தனது கைகளை உயர்த்திக் காட்டினார்.

மக்கள் மத்தியில் சென்று கைகளை உயர்த்தி காட்டிவாறு 20 முதல் 25 வயது இளைஞனை போல் ரணில் விக்ரமசிங்க நடந்து கொண்டார்.

நான் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடப் போவது குறித்து நவம்பர் 22 ஆம் திகதிக்கு முன்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் எனக்கும் ஒரு நொடிப் பொழுதுகூட பேச்சுவார்த்தை கூட நடந்ததில்லை.

அமைச்சராக நான் நாடாளுமன்றத்தில் அமைச்சர்களின் ஆசனத்தில் அமர்ந்திருந்தபோது இப்போது நாங்கள் செல்வோம் என ரணில் விக்ரமசிங்க சைகை காட்டினார். சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வீட்டுக்கே நாங்கள் செல்ல விருந்தோம். ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான பேச்சு வார்த்தை என அவர் கூறினார்.

இதனடிப்படையில் நானும், ரணில் விக்ரமசிங்கவும் வாகனங்களில் ஏறி நாடாளுமன்றத்தின் முன்பாக உள்ள குளத்தை கடக்கும் போது, ஹெலிகொப்டர் ஒன்று நாடாளுமன்றத்தில் தரையிறங்கியது. சில வினாடிகள் தாமதித்திருந்தால், அதில் வந்தவர் எனது பயணத்தை தடுத்திருப்பார்.

அத்துடன் சில மணிநேரம் தாமதமாகியிருந்தாலும் அன்று எடுத்திருந்த தீர்மானத்துக்கு அமைய எமது பயணத்தை தொடர்ந்திருப்போம். அதனை தடுக்க எவராலும் முடிந்திருக்காது.

என்னை ஜனாதிபதி ஆக்கியதில் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியினர் வழங்கிய உதவி எனது மனதில் என்றும் நிலைத்திருக்கும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (செ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில்
மாதம் 3 இலட்சத்துக்கு
மேல் உழைக்கக்கூடிய
Business &
Hotel Management
+
English
பயிற்சிக்காலத்தில்
15000 ரூபாய் வரை
உழைக்கலாம்

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து
6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும்
100% விசா உத்தரவாதம்!
புதிய பிரிவு
செவ்வாய், வியாழன்
10.00 am
அனுமதிகளுக்கு:
077 3616 798
Sikaram Institute of Hospitality & English
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம்)


# சர்வதேச விசாரணை...

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைமையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் யுத்தம் நடைபெற்றது. போரென்றால் அங்கு ஈவிரக்கம் என்ற பேச்சுக்கு இடமில்லையென்பதை போராளியாக இருந்தவன் என்ற அடிப்படையில் கூறுகின்றேன்.

விடுதலைப் புலிகளும் மிகப்பெரும் குற்றங்களை செய்துள்ளனர். பெருமளவானோரை படுகொலை செய்துள்ளார்கள். எங்களுக்கு சாதகமானோரை கொன்றொழித்துள்ளார்கள்.

இந்த நாட்டில் விடுதலைப் புலிகள் அழிந்த பின்னர் தான் ஒரு சமாதானம், நிம்மதி வரும் என்று நாங்களும் உறுதியாக நம்பினோம். ஆனால் அந்த யுத்தத்தின் போது தமிழ் மக்கள் கேடயமாக பயன்படுத்தப்பட்டு அழிந்தது வேதனையான விடயம்.

யுத்த காலப் பகுதியில் கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்டபோது நாங்கள் சரத் பொனசேகாவிடம், பசில் ராஜபக்ஷவிடம, இந்திய உயர்ஸ்தானிகரிடம் எல்லாம் இதனை நிறுத்த நட வடிக்கையெடுக்குமாறு கூறியிருந்தோம்.

இதனை சிங்கள இராணுவம் செய்தது என்பதற்கு அப்பால் அதற்கான சந்தர்ப்பத்தினை தமிழர்கள்தான் வழங்கினார்கள். இந்த அழிவுகள் எதிர்காலத்தில் வராமல் தடுக்க வேண்டுமேயொழிய இது தொடர்பில் ஒருசாராரை மட்டும் தூக்கிலிட வேண்டும் என்பதில் நான் மாற்றுக்கருத்து கொண்டவன்.

தற்போது உள்ள சூழலில் விசாரணையொன்று நடைபெற்று அறிக்கை வந்துள்ளது. உள்நாட்டு பொறிமுறையூடாக சிங்கள மக்கள மத்தியில் குரோதம் வளராத வண்ணம் தமிழர்களுக்கு தீர்வு வழங்கவேண்டும் என அனைவரும் கருதுகின்றனர். இந்த எண்ணத்தினை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு தற்போதைய எதிர்க்கட்சி தலைவருக்கு வந்துள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை பொறுத்த வரையில் சர்வதேச விசாரணை தேவையற்ற ஒன்றாகவே பார்க்கின்றோம். இங்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு பல அறிக்கைகள் வந்துள்ளது. காணாமல்போனவர்கள் தொடர்பிலான அறிக்கைகள் வந்துள்ளது.

அதேபோன்று தற்போதைய ஆட்சிமாற்றத்தில் கடந்த கால ஆட்சியாளர்கள் ஓரங்கட்டப்பட்டு தற்போது உள்ள ஆட்சியாளர்கள் உள்ளக விசாரணை மூலம் தீர்வினைப் பெற்றுக்கொடுப்போம் என்று உறுதியளித்துள்ளனர். இதுதான் எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எங்களை புறக்கணித்து வருவதனால் தொடர்ந்து அவர்களுடன் இயங்க முடியா நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நாங்கள் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். அதற்கு பதில் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அவர்களுடன் இயங்க முடியாத நிலையே ஏற்படும்.

எதிர்வரும் பிரதேசசபை தேர்தலில் தமிழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனித்து தமது படகுச் சின்னத்திலேயே போட்டியிடும் எனவும அவர் தெரிவித்தார். (செ-12)

# ஜனாதிபதிக்கும்...

த்த பிரதமர் ரணில்,

சிலர் தூங்கி போனதால், ஜனாதிபதிக்கும எனக்கும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. புதிதாக சிந்திக்க முடிந்த இடத்தில் நாம் இருக்கின்றோம். தற்போது நடைமுறையில் உள்ள அரசியல், பொருளாதாரத்தினால் முன்னோக்கி செல்ல முடியாது.

இந்த சேற்றில் இருந்து கொண்டு கட்சிகளாக பிளவுப்பட்டு சண்டையிட்டு கொள்வதா?. கட்சிகளாக பிரிந்து சண்டையிட விரும்புகிறார்களாக? என நான் கேட்கிறேன்.

நாம் அனைவரும் இணக்கத்துடன் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தோம். மக்களுக்கு சிறந்த வருமானத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே இதனை மேற்கொண்டோம்.

தேசிய அரசாங்கம் என்பது நான்கு வரிசைகள் உள்ள அதிவேக நெடுஞ்சாலையில் செல்லும் ஹைப்பிரிட் வாகனத்தை போன்றது, செல்லும் நேரத்தை கூற முடியும்.

ஆசன பட்டியை மாட்டிக்கொள்ள வேண்டும். இல்லையொன்றால் விபத்து நேரிடும். ஹைப்பிரிட் வாகனத்தில் ஆசன பட்டி இருக்கிறது. காற்று பையும் இருக்கிறது.

எனக்கும் ஜனாதிபதிக்கும் நித்திரை வருவதில்லை. மற்றவர்கள் நித்திரை கொண்டனர். அதன் காரணமாகவே நாங்கள் இந்த இடத்திற்கு வந்தோம்.

60 மாதங்களில் புதிய நாட்டை உருவாக்க அர்ப்பணிப்போம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (செ-11)


FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH
FLC
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்.....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி, ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 12.09.15 சனி 8 மணிக்கு
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 12.09 @ 4pm
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 16.09 @ 4pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(C-2053)



Digital
விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-2055)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



O/L உடன் விரும்பிய
எந்த நாட்டுக்கும் செல்ல
UK, Australia, New Zealand, Switzerland, Poland, Spain, Canada, Malaysia, Singapore
பல்கலைக்கழக கற்கைநெறி அனுமதிகள்

மாதம் 3 இலட்சம் வரையில் சம்பாதிக்கக்கூடிய
Hotel Management
கற்கைநெறி அனுமதிகள்
Dubai, Qatar, Bahrain, Oman, Malaysia, Mauritius, Saudi Arabia, Doha,
வேலைவாய்ப்புக்கள்
STUDENT VISA - SPOUSE VISA - DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION - VISIT VISA
15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான
எந்த வகை விசா என்றாலும்...
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004 / 021 222 00 11



NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
DAY CLASSES
திங்கள் → வெள்ளி
2015 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கட்குரியது

| | |
|---|---|
| PHYSICS | திரு.S.சோதிலிங்கம் |
| | திரு.G.பிரபா |
| CHEMISTRY | திரு.K.சிவத்திரன், திரு.T. உமாசங்கர் (PAST PAPER) (MODEL PAPER) |
| | திரு.T.சுசாந்தன், திரு.G. BENO |
| BIOLOGY | வழமையான ஆசிரியருடன் |
| | திரு.T.கெங்காதரன் |
| COM.MATHS | திரு.P.செந்தில்நாதன் |
| | திரு.S.சிவகரன் |

ஆரம்பம் :- 15-09-2015 TUESDAY 7.30 AM
தொடர்புகட்கு. 0777 917611
(C-2058)



NEW SCIENCE WORLD
VICTORY MUST
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com
Hotline : 077 336 4055
G.C.E (A/L) 2016
Day Classes
திங்கள் - வெள்ளி

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குகன் / திரு. R. குமரன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ் / திரு. T. சிவகுமார் |
| உயிரியல் | திரு. S. பொன்திவாகரன் / திரு. V. உமாசங்கர் |
| இணை.கணிதம் | திரு. S. செந்தில்ராஜ் |

ஆரம்பம் :- 09.09.2015 புதன் காலை 9.00மணி
(C-2054)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.